1876-ல் வருஷம் ஆரம்பிக்கப்பட்டது
Telegrams: "CATHOLIC PRESS", JAFFNA.
Telephone: No. 100.

# சத்திய வேத பாதுகாவலன்

REGISTERED AT THE CEYLON G. P. O. AS A NEWSPAPER.

"கர்த்தர் நகரத்தைக் காக்காவிட்டால் அதைக் காக்கிறவன் கண்விழிப்பது வியர்த்தம்"

80-ம் புத்தகம் | யாழ்ப்பாணம் 1955-ம் ஆண்டு மார்கழி மாதம் 1-ந் திகதி வியாழக்கிழமை — பிரதிசதம் 10 | 47-ம் இலக்கம்

## சுதேச வர்த்தமானம்

### வாழ்க்கைச் செலவுப் புள்ளி

இலங்கையிலே சென்ற கார்த்திகை மாதத்தில் வாழ்க்கைச் செலவுப்புள்ளித்தொகை 100·8 ஆகக் கூடியிருக்கின்றது. இதற்குக்காரணம், ஈரவெங்காயம், பம்பாய்வெங்காயம், மாக்கறி ஆதியன விலையுயர்ந்தமையேயென்று சொல்லப்படுகிறது.

### ஜி. சி. ஈ. பரீட்சை

இம்மாதம் 6-ந்திகதி செவ்வாய்க்கிழமை ஆரம்பமாகி நடந்தேறவிருக்கும் ஜி. சி. ஈ. பரீட்சைக்கு அறுபதினுயிரத்துக்கு மேற்பட்ட மாணவர், மாணவிகள் சமுகமளிக்கவிருக்கின்றார்கள். இலங்கைமுழுவதிலும் 550 மத்தியதானங்களிலே இப்பரீட்சை நடைபெறவிருக்கின்றது.

### பரிசளிப்பு விழா

உயிலங்குளம், கத்தோலிக்க புதிய கனிஷ்டபாடசாலைப் பரிசளிப்புவிழா நிகழும் 9-12-55 வெள்ளிக்கிழமை பிற்பகல் மன்னார்-மாதோட்ட மூப்புச் சுவாமியாரான அதிவண. ஜே. நிக்கலஸ்சுவாமியவர்கள் தலைமையிலே, கட்டளைக்குரவர் வண. என். கோமெஸ் சுவாமியவர்களின் சமுகத்தில் நடந்தேறவிருக்கிறது. — நிருபர்

### பதவியிலிருந்து விலகிவிடுவேன்

சேர் பொன்னம்பலம் இராமநாதன் தினவிழா சென்ற ஞாயிற்றுக்கிழமை கொழும்பிலே விவேகானந்தசபாமண்டபத்தில் நடந்தேறியது. அதற்குத் தபால்—வானொலி மந்திரியாரான திரு. எஸ். நடேசன் அவர்கள் தலைமைவகித்துப் பேசியபோது: "ஐக்கியதேசீயக் கட்சி மகாநாட்டில் மொழிப்பிரச்சினை பற்றிய பிரேரணைவிஷயமாக விவாதிக்கப்படும்போது, எனதுகருத்தை அக்கட்சிக்குத் திட்டவட்டமாக எடுத்துக் கூறுவேன்; எனதுகருத்து அங்கீகரிக்கப்படாமல் போகுமிடத்து; மந்திரி பதவியிலிருந்தும், அரசாங்க கட்சியிலிருந்தும் விலகிவிடுவதே எனதுதீர்மானம்" எனக் கூறியிருக்கின்றார். காலஞ்சென்ற தேசபிதா திரு. டி. எஸ். சேனநாயக அவர்களுடன்சேர்ந்து ஐக்கியதேசீயக்கட்சியை உருவாக்கியவர்களில் திரு. எஸ். நடேசன் அவர்களும் ஒருவராவர். தற்போது அக்கட்சியின் உபதலைவர்களில் இவரும் ஒருவரென்பது ஈண்டுகுறிப்பிடத்தக்கது.

### மீண்டும் பாக்குநீரிணையை

இலங்கைக்கும், இந்தியாவுக்குமிடையிலுள்ள பாக்குநீரிணையை முன்னொருமுறை நீந்திப் பிரஸ்தாபம்பெற்றவரான திரு. எம். நவரத்தினசாமி அவர்கள் அடுத்தவருட ஆரம்பத்திலே மீண்டும்ஓர்தரம் அந்தநீரிணையை நீந்திக்கடக்க விருக்கிறாரெனத் தெரியவருகிறது. அவர் கோடிக்கரைக்கு நீந்திச்சென்று அங்கிருந்து திரும்புவார்.

### ஆசிரியர் ஏ. பி. அன்ட்று, பி. எஸ்சி.

சம்பத்திரிசியார்கல்லூரி ஆசிரியர்களில்ஒருவரான திரு. ஏ. பி. அன்ட்று அவர்கள் சென்னைச்சர்வகலாசாலையின் பி. எஸ்சி. எனும் சாஸ்திரபட்டப் பரீட்சையில் அரங்கேறியிருக்கிறாரென அறிந்து சந்தோஷமானோம். இவர் யாழ்ப்பாணத்திலே பிரபல சுருட்டு வியாபாரியாராய் விளங்கியிருந்து காலஞ்சென்ற திரு. ஏ. வஸ்தியாம்பிள்ளை அவர்களின் புதல்வராவர்.

### உப்புஅடைக்கும் தொழிற்சாலை

ஆனையிறவிலே செய்கைபண்ணப்படும் மேசைஉப்பு தற்போது மருதானையிலுள்ள மேசைஉப்புத் தொழிற்சாலையிலே அடைக்கப்பட்டு வருகிறது. இதனால் அதிகசெலவு ஏற்படுவதாலே மருதானையிலுள்ள தொழிற்சாலையை ஆனையிறவுக்கு மாற்றுவதென முடிவு செய்யப்பட்டிருக்கிறது. அடுத்தவருட ஆரம்பத்திலே உப்படைக்கும்வேலை ஆனையிறவிலுள்ள உப்பளத்தில் ஆரம்பிக்கப்படுமெனத் தெரியவருகிறது.

### பிரதமரின் அறைகூவல்

கலுபோவலையிலே கொழும்புதெற்குப் புதியஆஸ்பத்திரிக்குச் சென்றதிங்கட்கிழமை பிரதமர் சேர் ஜோண் கொத்தலாவலஅவர்கள் அஸ்திவாரக் கல்நாட்டும் வைபவத்திலே மொழிப் பிரச்சினைபற்றிப் பேசியபோது: "இந்தக்கொத்தலாவல நாட்டின்முன்னேற்றத்தையல்லாது அதன்விழுகையைக் காணமாட்டார்; இதுவிஷயமாய் நீங்கள் எவ்வித அச்சமும் கொள்ளத் தேவையில்லை; பிறநாட்டுத் தொடர்புள்ள சிங்களவர்கள்சிலரே நாடெங்குஞ்சென்று ஒரேமொழிதான் வேண்டுமெனக் கூச்சல் போடுவதன்மூலம் வகுப்புவாதத்தை உண்டுபண்ணுகின்றனர்; எல்லாமக்களும் இந்தநாட்டில் சந்தோஷமாகவாழ நான் வழிசெய்வேன்; நான்சென்ற நாடுகளிலெல்லாம் கொத்தலாவல என்ற மட்டில் நான் கௌரவிக்கப்படவில்லை; ஆனால், இலங்கையனென்ற மட்டிலேதான் கௌரவிக்கப் பட்டேன்; ஒவ்வொருவரும் இந்தநல்லபெயரைக் காப்பாற்றுவதிலே நாட்டுக்காகஉழைக்கவேண்டும்" எனக் கூறலாயினர்.

### காரும் றெயினும் மோதின

புங்கங்குளத்திலுள்ள பாதுகாப்பற்ற றெயில்வேக்கடவையிலே சென்றசனிக்கிழமை கொழும்பிலிருந்து காங்கேசன்துறையைநோக்கி வந்துகொண்டிருந்த யாழ்ப்பாண 'எக்ஸ்பிறெஸ்' றெயினுடன் கார்ஒன்றுமோதிச் சேதமடையலாயிற்று. றெயின் கடவையூடாக வந்துகொண்டிருக்கையில் வேகமாகச் சென்றகார் அதனுடன்மோதிக்கொண்டது. கார் சேதமடைந்தபோதிலும் அதிலிருந்தமூவரும் அதிர்ஷ்டவசமாகத் தப்பிக்கொண்டார்கள்.

### கம்யூனிஸ்த எதிர்ப்புமுன்னணி

கம்யூனிஸத்தை எதிர்க்கும் தாய்லாந்து, மலாயா, சிங்கப்பூர்போன்ற நாடுகள் கிழ்த்திசையிலே கம்யூனிஸத்தை எதிர்த்துப் போராடுமாறு ஓர் பொதுமுன்னணியை அமைக்கச் சிரத்தைகாட்டியதாயும், விரைவிலே அந்த நாடுகளின் பிரதிநிதிகளுடன் இதுவிஷயமாகப் பேச்சுவார்த்தைநடத்த முடியுமெனத் தாம் எதிர்பார்ப்பதாகவும் பிரதமர் சேர் ஜோண் கொத்தலாவல அவர்கள் சென்றவாரம் தமது சுற்றுப் பிரயாணத்தை முடித்துக்கொண்டு கொழும்புக்குத் திரும்பியதும் கூறியிருக்கின்றார் விசேஷமாக மலாயாவிலும், சிங்கப்பூரிலும் கம்யூனிஸ்தபலம் மிதமிஞ்சியவிதமாய் இருப்பதாக அவர் தெரிவித்திருக்கின்றார்.

### கடற்தொழிலாளரின் வேண்டுகோள்

அரசாங்க கடற்தொழிற்பகுதியின் தற்காலிகதலைவரான திரு. எச். சி. குணவர்த்தன அவர்கள் யாழ்ப்பாணம் வந்திருந்தபோது, சென்றஞாயிற்றுக்கிழமை குருநகரிலுள்ள கடற்தொழிற் காரியாலயத்திலே யாழ்ப்பாணக் கரையோரவாசிகளது சேமலாபசங்கத்தின் தூதுக்கோஷ்டிஒன்று அவரைச்சந்தித்து, (1) மீன்பிடிக்க யந்திரப்படகுகளை உபயோகிக்கத் தொடங்கியிருக்கும் யாழ்ப்பாணக் கடற்தொழிலாளர்களுக்குக் கனடியயந்திரங்கள் அதிகமாகக் கிடைக்கச்செய்ய வேண்டுமென்றும், (2) மீன்பிடி துறைமுகத்துள் படகுகள் செல்லும் கடற்பாதையைச் சேறுவாரி ஆழமாக்கித் தரவேண்டுமென்றும், (3) எல்லாப்படகுகளும் தங்கப்போதியதும், புயற்காற்று வீசுங்காலத்திலே அவற்றிற்குப் பாதுகாப்பளிக்கக் கூடியதுமான வெளித்துறைமுகம் ஒன்று அமைத்துத்தர வேண்டுமென்றும், (4) உள்மீன்பிடி துறைமுகத்தின் கிழக்குக்கரையிலே மீன்ஏலவிற்பனை மண்டபம்ஒன்றையும், கடற்தொழிலாளர்கள் தங்குமடம்ஒன்றையும் அமைத்துத்தர வேண்டுமென்றும், (5) கடற்தொழிற் பகுதியின்கீழ் கடற்தொழிலாளருக்கு வீடுகள்கட்டிக் கொடுக்கவேண்டுமென்றும் மனுப்பண்ணிக்கொள்ளலாயிற்று.

### புதியஓட்டுத் தொழிற்சாலை

சுமார் ஒருலட்சம்ரூபாசெலவில் ஜேர்மனியிலிருந்து தருவித்து, நாத்தாண்டிக்குச் சமீபமான தங்கொட்டுவையிலுள்ள நூரணி ஓட்டுத்தொழிற்சாலையில் ஈசுவலிகம்பெனியால் நிறுவப்பட்டுள்ள புதிய யந்திரம்ஒன்றைக் கைத்தொழில்மந்திரியாரான சேர் கந்தையா வைத்தியநாதன் அவர்கள் சென்றதிங்கட்கிழமை இயக்கிவைத்தார். இந்தயந்திரம் நாள்ஒன்றுக்கு நாற்பதினுயிரம்ஓடுகளைச் செய்யக்கூடியது. பொதுவிலே இந்தப்புதிய ஓட்டுத்தொழிற்சாலை வருடம்ஒன்றுக்கு 60 லட்சம்ஓடுகளையும், 30 லட்சம்செங்கற்களையும் செய்யக்கூடியதாகும்.

### தெல்லிப்பழை மிஷன்பிறெஸ்

யாழ்ப்பாணத்திலே சுமார் 120 வருடங்களுக்கு மேற்பட்ட காலத்தைக் கண்டு சரித்திரபிரஸ்தாபம் பெற்ற தெல்லிப்பழை, அமெரிக்கமிஷன் அச்சகம் புதுவருடஆரம்பத்தோடு அங்கிருந்து மானிப்பாயிலே சித்தஞ்செய்யப்பெற்றுள்ள புதியநிலையத்துக்கு மாற்றப்படவிருக்கிறது. தெல்லிப்பழை மிஷன்வளவில் ஏற்பட்டுள்ள இடவசதிக்குறைவே அதன் இடமாற்றத்துக்குக் காரணமாகும். இந்தஅச்சகம் முந்தமானிப்பாயிலேயே இருந்துவந்து இற்றைக்கு 50 வருடங்களின்முன்னரே தெல்லிப்பழைக்குக் கொண்டுபோகப்படலாயிற்று.

### தமிழருக்கு உரிமைச் சாசனம்

"இலங்கையின் அரசகருமமொழியாகச் சிங்களம்மட்டுமே ஆக்கப்படுமானால், அது இலங்கையிலுள்ள தமிழ்பேசும் சிறுபான்மைச் சமூகத்தினரின் அடிப்படைஉரிமைகளைப் பெரிதும் பாதிக்கும்; ஆகவே, தமிழ்ப்பேசும் சிறுபான்மைச் சமூகத்தினரின் இந்த அடிப்படை உரிமைகளைப் பாதுகாக்க வேண்டியது அவசியமென்று நான் கருதுகிறேன்; இந்தியாவில் இருப்பதேபோல் இலங்கையின் அரசியற்சட்டத்திலும்சீவாதாரஉரிமைகள் இணைக்கப்படவேண்டும்; இதைநிறைவேற்ற இலங்கை அரசியல்சட்டத்தைத் திருத்தவேண்டும்" என்று தபால் — வானொலி மந்திரியாரான திரு. எஸ். நடேசன் அவர்கள் சென்றதிங்கட்கிழமைகாலை பிரதமர் சேர் ஜோண் கொத்தலாவல அவர்களைச்சந்தித்துத் தெரிவித்திருக்கிறார். மேலும் இலங்கை அரசியல்அமைப்புத் திட்டத்திலே சீவாதார உரிமைகளின் இடாப்பொன்றை இணைக்கவேண்டியதன் அவசியத்தைப்பற்றி ஐக்கியதேசீயக் கட்சியின் அடுத்த காரியக்கம்மிற்றிக் கூட்டத்தில் எடுத்துக்கூறுவதாகப் பிரதமர் தமக்கு வாக்குறுதி அளித்துள்ளாரென்றும் அவர்தெரிவித்திருக்கின்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உத்தரிக்கிற ஸ்தலம் என்ருல் என்ன?

(சி. எஸ். நாயகம், ஸ்றேஷன்மாஸ்றர், கெம்பாஸ்—மலாயா)

(முன்தொடர்ச்சி)

உத்தரிக்கிறஸ்தலத்திற்குப் போகும் ஆத்துமாக்கள் யார்? தங்கள் மரண வேளையிலே, ஆவிபிரியும் நேரத்திலே சாவானபாவத்திஞல் ஞானஉயிராகிய தேவஇஷ்டப்பிரசாதத்தைப் போக்கடியாது, அற்பபாவங்களோடு மரிக்கிறவர்களேயாம். எனவே, நன்மைக்கோ, தின்மைக்கோ நமது நித்தியத்தைத் தீர்த்துவைப்பது அந்தக்கடைசிவிஞடியே. அந்நேரம் எவ்விதபாவமுமின்றித் தேவஇஷ்டப்பிரசாத அந்தஸ்தில் மரிப்போமாஞல் நேரேமோட்சம். சாவானபாவத்திஞல் தேவஇஷ்டப்பிரசாதத்தைப் போக்கடித்து மரிப்போமாஞல் நேரேநரகம். அப்போது அற்பபாவங்களோடு தேவஇஷ்டப்பிரசாத அந்தஸ்தில் மரிப்போமாஞல் நேரேஉத்தரிக்கிறஸ்தலம். ஆதலால், சாவானபாவமே தேவஇஷ்டப்பிரசாத அந்தஸ்தைப் போக்கடிப்பது. அற்பபாவமோ ஞானஅந்தஸ்தைப் போக்கடியாது. ஆயினும், அற்பபாவங்களை நாம் ஆரம்பத்திலே அசட்டைசெய்வோமாஞல் ஈற்றில் விணேயமாகவே முடியும். ஏனெனில், அற்பபாவங்களே நம்மைச் சாவானபாவங்களுக்கு வழிநடத்துவன. நமது ஆன்மாவைக் கைப்பற்றப் போராடும் முச்சத்துருக்களின் "முன் அணிப்படைவீரர்" (Advance Party) இவைகளே. நமது ஆன்மாவை இந்தச்சத்துராதிகள்வந்து சிறைப்பிடிக்கக் காட்டிக்கொடுக்கும் "உளவுகாரர்" (Spies) இவைகளே. தாவீதரசன் எச்சரிக்கையின்றி ஓர் பார்வையிஞலேயே பாவப்படுகுழியில் விழுந்தார். ஆகவே, நாம் அற்பபாவங்கள்மட்டில் விழிப்பாயிருக்க வேண்டும். அன்றேல், படிப்படியாகச் சாவானபாவம் அலைபோல்திரண்டுவந்து நமதுஆத்துமாவைச் சிறைப்படுத்தி நரகபாதையில் கொண்டுபோய்விடும்.

நிற்க, நாம் நல்லபாவசங்கீர்த்தனஞ் செய்திருக்க, அதஞல் நமதுபாவங்களெல்லாம் மன்னிக்கப்பட்டிருக்க, நாம் உத்தரிக்கிறஸ்தலத்திற்கு ஏன் போகவேண்டும்? நல்லபாவசங்கீர்த்தனஞ்செய்வதாலே நமதுபாவங்கள் மன்னிக்கப்பட்டன என்பதுமெய். ஆயின், பாவங்கள் மன்னிக்கப்பட்டபோதிலும் அவற்றைப்பொறுத்தமட்டில் இன்னுமோர் சிறுதோஷம் தங்கியிருக்கின்றது. அதற்காகவே ஓர்சிறு தண்டனையாக இவ்வுலகில் அல்லது உத்தரிக்கிறஸ்தலத்தில் உத்தரிக்க வேண்டியவர்களாயிருக்கிறோம். உதாரணமாக: ஒருவன் மற்ருெருவனுடைய பொருளைத் திருடிக் கையும்மெய்யுமாக அகப்பட்டானென்று வைத்துக்கொள்வோம். திருடியவன் தன்குற்றத்தை நீதிஸ்தலத்திலே ஒப்புக்கொண்டு மன்னிப்பை இரந்து நிற்கிறுன். அப்போது திருடப்பட்டபொருள் உடையவனுக்குப் போகின்றது. அம்மட்டிலே உடையவனுக்கு நட்டமில்லாமல் கருமம் நன்மையாய் முடிந்தபோதிலும்—திருடினவன் தன்குற்றத்தை ஒப்புக்கொண்டு மன்னிப்பை இரந்துநின்றபோதிலும் அவன் கட்டளைச்சட்டத்தை மீறிச் செய்த குற்றத்துக்காக ஓர்சிறுதண்டனைக்காவது தப்பப்போவதில்லை. அவ்வாறே பாவசங்கீர்த்தனமும் என்க. எனவே, இம்மையிலோ, மறுமையிலோ இத்தண்டனையை உத்தரித்தே தீரவேண்டும்.

நமது பாவக்கடனைத் தீர்ப்பதற்குக் குறிக்கப்பட்டுள்ள இடங்கள்எத்தனை? இரண்டு. ஒன்று, இப்பூவுலகம். இங்கே நமதுவாஞளில் நமமுடையபாவங்களுக்குப் பரிகாரமாக—தண்டனையாகத் தேவன் நமக்கு அனுப்புகிறசிலுவைகளை நல்மனதோடு—அவர்சித்தத்துக்குப் பணிந்தமனதோடு ஏற்று அனுபவிப்போமாஞல் பவுண்கணக்கில் நாம் இறுக்கவேண்டியகடனைச் சதக்கணக்கில் தீர்த்தவர்களாவோம். மரணமடையும்போது மறுமையில் எவ்வித உத்தரிப்புமின்றி நேரே மோட்சம் போய்ச்சேர்வோம். ஆஞல், இந்தக் கடனை இவ்வுலகில் சரிவரத்தீர்க்காதவர்கள் மறுமையில் அதனைத் தீர்க்க வேண்டியவர்கள். அவ்விதம்போய்த் தீர்க்கவேண்டியஇடந்தான் "உத்தரிக்கிறஸ்தலம்" எனப்படுவது. ஏனெனில், மோட்சம் சர்வேசுரனின வாசஸ்தலமாய் இருப்பதால்—அது மிகவும் பரிசுத்தமுள்ள ஸ்தலமாய் இருப்பதிஞல் எவ்வித பாவமாசு—பாவக்கறை—பாவக்கடஞேடு எவரும் அதில்நுழையவோ, பிரவேசிக்கவோமுடியாது (காட்சி. 21:27).

அன்றியும், "யாராவது மனுமகனுக்குவிரோதமாய்ஒருவார்த்தை சொல்லியிருந்தால் அவனுக்கு மன்னிக்கப்படும். இஸ்பிரீத்துசாந்துவுக்கு விரோதமாய்ப் பேசுவாஞகில் அவனுக்கு இம்மையிலும் மறுமையிலும் மன்னிக்கப்பட மாட்டாது" (மத். 12:32). அதஞல், மறுமையிலும மன்னிக்கப்படுகிற பாவங்கள் உண்டென்பதைத் தெளிவாக இவ்வாக்கியத்தைக் கொண்டு ஆண்டவர் அறிவிக்கிருர். இதைக் கொண்டு "உத்தரிக்கிறஸ்தலம்" உண்டென்பது உள்ளங்கை நெல்லிக்கனி போய் விளங்குகிறது அல்லவா? ஏனெனில், நரகத்தில் ஒருபாவமும் மன்னிக்கப்படுவதில்லை. மோட்சத்தில் ஓர் பாவத்தோடுதானும் எந்தஆத்துமமும் பிரவேசிக்கமுடியாது. ஆகையால, மறுமையில் மன்னிப்படையத்தக்க ஓர்இடம் இருத்தல்வேண்டும். அதுவே "உத்தரிக்கிற ஸ்தலம்."

ஆகவே, உத்தரிக்கிறஸ்தலத்துக்குப் போகாமல் நமது உத்தரிப்புக்கடனை இவ்வுலகிலேயே தீர்க்கமனதுள்ளவர்கள் இனிமேல் தங்கள்பாவத்துக்குத் தண்டனையாகவரும் சிலுவைகளை நல்மனதோடுஏற்று, முன்னர்கூறிய சந்நியாசியாரைப்போல மரணபரியந்தம் தேவசித்தத்திற்கொத்தபிரகாரம் முறுமுறுப்பின்றி அனுபவித்து, இவ்விதமாகப் பாவக்கடனைச் சதப்படி பிரமாணிக்கமாய்த்தீர்த்து, "நம்பிக்கையுள்ள நல்லகடஞளியே! உன் எசமானுடைய சந்தோஷத்துக்குள் பிரவேசி" (மத். 25:23). என்னும் கர்த்தரின் அமிர்தவாக்கைப்பெற்று மோட்சகரைசேர நாம்ஒவ்வொருவரும் ஆனமட்டும் வருந்துவோமாக!

சுபம்!



# பல தேசங்களில்

● கம்யூனிஸ்த யூகோசிலேவியாவிலே மொஸ்றர்நகர் மேற்றிராணியாரான பீற்றர் கியூல் ஆண்டவர் ஏழுவருடகாலஞ் சிறைவாசஞ்செய்தபின் நோய்காரணமாக விடுதலைசெய்யப் பெற்றிருக்கின்றுர். ஆயினும், இவர் அங்கே கருதிஞல் ஸ்ரிபினக் ஆண்டவரைப் போலவே சுதந்திரமாகவாழ விடப்படமாட்டாரென நம்பப்படுகிறது.

● சோவியற்ருஷியாவின் கட்டுப்பாட்டிலே அடங்கியுள்ள கிழக்குஜேர்மனியிலிருந்து சென்றஐப்பசிமாசத்தில் 33,000 ஜேர்மனியர்கள் தப்பியோடிச் சுதந்திரமேற்குஜேர்மனியிற்போய் அடைக்கலம் புகுந்திருக்கிருர்கள். அதற்குமுந்திய எந்தஒருமாசத்திலும் இவ்வளவு பெருந்தொகையாஞேர் அங்குபோய் அடைக்கலம் புகுந்ததேயில்லை.

● 1954-55-ம் ஆண்டின் தவணை முடிவிலே ஸ்பெயினில் மொத்தமாக 1,021புதியகுருமார் அபிஷேகஞ்செய்யப் பெற்றிருக்கின்றனர். இத்தொகை முந்திய வருடத்திலும் நூறுபோரால் கூடியதாகும். தற்போது ஸ்பானிய தேச பிரதமகுருமடங்களில் எண்ணுயிரவருக்குமேற்பட்ட குருத்துவமாணவர்கள் படித்துவருகின்ருர்கள். இப்போது அத்தேசத்தில் குருமார், சந்நியாசர்களாய் 18,221 பேர் இருக்கின்ருர்கள்.

● தற்போது சோவியற்ருஷியாவின் வெளிநாட்டுமந்திரியாய் இருந்துவருகிறவர் எம். மொலற்ருேஎன்பவரே. இது அவருடையஉண்மையான பெயரல்ல. இதற்கு ருஷியமொழியில் சம்மட்டியென்றுபொருள். இது தாஞகவே தனக்கு அவர்சூட்டிக்கொண்ட பெயராகும். இற்றைக்கு 38 ஆண்டுகளின்முன் ருஷியாவிலே பொல்ஷிவிக் புரட்சி உண்டானபோது மொலற்ருே சம்மட்டிஅடியில் இறங்கியதிலிருந்து இந்தப்பெயரை இவர் தனக்கு இட்டுக்கொண்டார்.

● இத்தாலியபாராளுமன்றபொருளாதார கம்மிஷனும், திறைசேரிக் கம்மிஷனும, போக்குவரத்துக் கம்மிஷனும் ஒன்றுசேர்ந்துநடத்திய மகாநாடு ஒன்று அங்கீகரித்துள்ள ஓர்திட்டப்படி, இத்தாலியில்வசிக்கின்ற கருதிஞல்மார் அத்தேச அரசாங்கறெயில்வேகளில் இலவசமாகப் பிரயாணஞ்செய்ய அனுமதிக்கப்படவிருக்கிருர்களென ருேமைநகரிலிருந்து தந்திச்சமாச்சாரம் கிடைத்திருக்கிறது.

● ஸ்பானியதேச மதிரித்தலைநகரிலே 4,000 பேரைக் கொள்ளக்கூடிய பாரிய யேசுசபைக் கோவில் ஒன்று தற்போது கட்டியெழுப்பப்பட்டிருக்கிறது. இது 1931-ம்ஆண்டு வைகாசி மாதம் அங்குகம்யூனிஸ்தர்களால் எரியூட்டப்பட்ட பழையகோவிலினிடமாகவே கட்டப்பட்டதாகும். இந்தக் கோவிலினுள்தான் அர்ச். பிரான்சீஸ் போர்ஜியாரினதும், திரிசேந்துநகர திருச்சபைச்சங்கத்தின் வேதசாஸ்திரவிற்பன்னரான யேசுசபைக்குரவர் லேய்னெஸ்சுவாமியாரினதும் கல்லறைகள் இருந்துவருகின்றன.

● ஐக்கியஅமெரிக்க கொன்செப்ஷன்நகரில் சமீபத்திலே ஒரேநாளில் குருத்துவாபிஷேகஞ் செய்யப்பெற்ற வண. மரியான் சிற்ஸ்மன், வண. அல்போன்ஸ் சிற்ஸ்மன் எனும் குரவர்கள் இருவரும் வேறுவேருன மூன்றுகன்னிசாசபைகளில் கன்னியாஸ்திரீமாராய் இருந்துவரும் ஏழுசகோதரிகளைக் கொண்டிருக்கிருர்கள். இவர்களின் பெற்ருேருக்குப் பதினெருபிள்ளைகள்.

● ருேமைநகருக்கு வெளியேயுள்ள அர்ச். கல்லீஸ்துவின் கல்லறைச்சுரங்கங்களைத் தாங்கள் பாதுகாக்கத் தொடங்கிய வெள்ளியூபிலிவிழாவைச் சமீபத்திலே சலேசியன்சபைக்குருமார் கொண்டாடிஞர்கள். இதன்ஞாபகார்த்தமாக முதலாவதுஅதிபரால் பெரியபாடற்பூசை நிறைவேறியது. அவ்வேளை பரிசுத்தபிதாவும் சோபனவாழ்த்துச் செய்திஒன்று அனுப்பியிருந்தார்.

● சோவியற்ருஷியாவின் கட்டுப்பாட்டில் அடங்கியுள்ள கிழக்குஜேர்மனியைச்சேர்ந்த கிழக்குப் பேர்ளின் பகுதியிலே கிழக்குஜேர்மனியின் கம்யூனிஸ்தஅதிகாரிகள் சமயவிரோத பொருட்காட்சிச் சாலைஒன்றை அமைக்கவிருக்கின்ருர்கள். விஞ்ஞானநாஸ்திக அறிவைப் பரப்பும்சபையின் மேற்பார்வையிலே நவமான நாஸ்திகபோராட்டம்ஒன்றைத் தொடங்குவதற்கான ஓர் ஆரம்பநடவடிக்கை இதுவாகும்.

● ஐக்கியஅமெரிக்கதேச சென்மெயின்ருட்நகரிலுள்ள கிளெயில்பிரசுரஸ்தாபனம் 12-ம்பத்திநாதபாப்பாசர் ஆக்கியஇருபத்தொரு செபங்களைச் சேகரித்து அச்சிட்டுச் சிறுபுத்தகரூபமாக வெளியிட்டிருக்கிறது. இதிலே புனிதவருடத்துக்கென்றும், மரியாயின் வருடத்துக்கென்றும், பரிசுத்தபிதா ஆக்கியசெபங்களும், அவர் உலகசமாதானத்துக்கென்று ஆக்கியஅநேக செபங்களும் அடங்கியிருக்கின்றன.

● வெயிலிஞல் இயங்கும் றேடியோஒன்றைச் சிக்காகோநகரிலே றேடியோதயாரிக்கும் ஸ்தாபனம் ஒன்று தயாரித்துள்ளது. பரிசோதனைநிமித்தமாகத் தயாரிக்கப்பட்டுள்ள இந்தறேடியோவை நிரந்தரமாகஇயங்கும்படி செய்யலாமெனச் சொல்லப்படுகிறது. வெயிலிஞல் இயங்கும் பற்றியோ, மூன்றுவாற்மின்சாரவிளக்கோவைத்து அதன்கீழ் றேடியோவை அமைத்துக்கொண்டால் அது இயங்கும்.

● பர்மாவின் முதலாவதுதேசிய சற்பிரசாதமகாநாடு அடுத்துநிகழும் 1956-ம்ஆண்டின் மாசிமாதத்திலே றங்கூன்நகரில் நிகழவிருக்கின்றது. அங்கு நவமாகவகுக்கப்பட்ட மேற்றிராசனம் 38 வயதுடைய ஜோர்ஜ் யு. கையோஆண்டவரைத் தனதுமேற்றிராணியாராகக் கொண்டிருக்கிறது. அம்மேற்றிராசனத்தில் அடங்கியுள்ள கத்தோலிக்கர் 30,000 பேர். பம்பாய்நகர் அதிமேற்றிராணியாரான கருதிஞல்வலேரியான் கிருசியாஸ் ஆண்டவர் மகாநாட்டுக்குத் தலைமைவகிக்கவிருக்கின்ருர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கத்தோலிக்க சமாச்சாரம்

### பரிசுத்தஸ்தானத்தின் மாதிரிகை

இந்தியாவிலே இராச்சியங்களைத் திரும்பப்பிரித்து எல்லைப்படுத்துதற்கென்று அரசாங்கத்தால் நியமிக்கப்பட்ட கம்மிஷன் தனதுவிசாரணையின் முடிவாக மொழிவாரி அடிப்படையிலே தேசத்தைத் திரும்ப இராச்சியங்களாக வகுக்கவேண்டுமெனச் சிபாரிசுசெய்திருக்கின்றது. அதனால், இற்றைக்கு இருவருடங்களின் முன் பரிசுத்தஸ்தானம் காட்டியமாதிரிகையை மேற்கொண்டே அவ்வாறு கம்மிஷன் செய்திருக்கின்றது. அப்போதுஇந்தியாவின் பிரதான மேற்றிராசனங்கள் மொழிவாரியாகவே வகுக்கப்படலாயின. கம்மிஷன் செய்துள்ளசிபாரிசுகள் அரசாங்கத்தால் அங்கீகரிக்கப்படுமென்று ஏறக்குறைய முற்றும் நிச்சயமாயிருக்கிறது.

### பாத்திமாவின் யூபிலிவிழா

பாத்திமாபதியில் தேவதாயார் அளித்தகாட்சிகள் உண்மைதானென்றுஒப்புக்கொண்டு லீறியா நகர் மேற்றிராணியாரான கொறேயாதா இல்லா ஆண்டவர்விடுத்த மேய்ப்பர்திருமுகத்தின் வெள்ளியூபிலிவிழா சமீபத்தில்வந்தபோது, அதன் ஞாபகார்த்தமாய் அவர் தமது சில்லுஆசனத்தில் அமர்ந்தபடியே வானொலிமூலம் ஓர்செய்தி விடுக்கலாயினர். பாத்திமாபதி இவரது மேற்றிராசனத்திலேயே அடங்கியுள்ளது. இந்தயூபிலியைக் கொண்டாடுமுகமாகச் சுமார் 50,000 யாத்திரிகர்கள் அப்பதியிலே சமுகமாயிருந்தார்கள். இவர்களிலே போர்த்துக்கேய மக்களைத்தவிர, ஐக்கிய அமெரிக்கதேசம், பெல்ஜியம், ஒல்லாந்து, சுவிர்சர்லாந்து, இங்கிலாந்து முதலாம் நாடுகளிலிருந்துபோனயாத்திரிகர்களும் அடங்கியிருந்தார்கள்.

### பாத்திமாவின் புதியசேத்திரம்

பாத்திமாவின் மூன்றுபிள்ளைகளுக்கும் தேவதாயார் அளித்த காட்சிகளுள் ஒன்று, 1917-ம் ஆண்டுஆவணிமாதம் 19-ந்திகதி வலின்ஹொஸ் எனுமிடத்திலுள்ள ஒலிவங்குழுவிலேயாகும். அங்கே அத்திருத்தாயாரின் சுரூபம்ஒன்றைக்கொண்ட ஓர் திருசேத்திரம் நவமாக அமைக்கப்படவிருக்கிறது. இந்த ஒலிவங்குழு அப்போது இருந்தபடியே இப்போதும் இருந்துவருகிறது. அங்கு கிராமவாசிகள் பாத்திமாநாயகியின் திருச்சுரூபம்ஒன்றை ஸ்தாபித்தார்கள். ஆட்டுமந்தைகளை இப்போதுமே அங்குகொண்டிருக்கின்றன. பிள்ளைகள் ஏறக்குறைய எப்பொழுதுமே அச்சுரூபத்தின் முன்பாகக் காட்டுப்புஷ்பங்களைக் கொண்டுபோய்ச்சாத்தி மாதாவைப் பக்திசெய்து வருகின்றார்கள். வலின் ஹொஸ் எனுமிடத்தில் அளித்தகாட்சியிலதான் தம்முடையகாட்சிகளின் உண்மையை மக்கள்நம்பப்பண்ணுவதான ஓர்புதுமையை ஐப்பசிமாதத்தில் தாம்செய்வதாகத் தேவஅன்னை வாக்களித்தார். அவர்அளித்த ஏனைய ஐந்து காட்சிகளும் கோவா டா ஈறியாவில் அருளப்படலாயின.

### திருவாங்கூர்– கோச்சி

இந்தியாவிலே திருவாங்கூர்–கொச்சி இராச்சியத்திலுள்ள குடிசனங்களில் ஏறக்குறைய நூற்றுக்கு 30 விகிதமானோர் கத்தோலிக்கராவர். அங்கே கத்தோலிக்கஅதிகாரிகள் நூற்றுக்கணக்கான கத்தோலிக்க கலாசாலைகளை நடத்திவருகின்றார்கள். சிறுபான்மையினர் தங்கள் இஷ்டம்போலக் கல்விஸ்தாபனங்களைக் கொண்டுநடத்தும் உரிமை இந்திய-அரசியல்அமைப்பிலே வழங்கப்பட்டிருக்கிறது. அங்ஙனமாக, திருவாங்கூர்–கொச்சி இராச்சியத்திலுள்ள கத்தோலிக்க கலாசாலைகளைத் தேசீயமயமாக்கும்படி கேட்டுச் சோஷலிஸ்தர்கள் கொண்டுவந்த ஓர்பிரேரணையை அரசாங்கம் திருப்பிவிட்டிருக்கிறது. அரசாங்கத்தின் ஆதீனத்திலே கத்தோலிக்க் கலாசாலைகளைக் கொண்டுவந்துவிடுமாறு இதற்கு முன்னும் அநேகமுறைகளிலே பிரயத்தனஞ் செய்யப்பட்டும் அதுபலிக்கவில்லை.

### மரித்தவர்களுக்காகச் செபம்

கனடாவிலே அங்கிளிக்கன் சபையாரின் திருத்தித்தொகுக்கப்பட்ட செபப்புத்தகத்திலே மரித்தவர்களுக்கான செபங்களும் நவமாகச் சேர்க்கப்பட்டிருக்கின்றன. இந்தச் செபப்புத்தகத்தை அத்தேச அங்கிளிக்கன் சபைப் பொதுச் "சினட்" சங்கம் ஏகமனதாகவும், பூரணமாகவும் அங்கீகரித்திருக்கின்றது. 1552-ம்ஆண்டிலிருந்து இதுவரைசெய்யப்பட்ட திருத்தம்எதிலும்பார்க்க இந்தச்செபப்புத்தகம் அதிகங்கூடுதலான திருத்தங்களைக் கொண்டிருக்கிறது. பிரித்தானியகலம்பியாவின் அங்கிளிக்கன் சபை அதிமேற்றிராணியாரான கனம். எச். ஈ. செற்றன் அவர்கள் இதுவிஷயமாய்ப் பேசியபோது, "மரித்தவர்களுக்கான இந்தச்செபங்கள் இப்போது அனுமதிக்கப்பட்டிருக்கின்றன; ஆனால், இதைச்சொல்லவேண்டுமென்பது சபைக்குருமாருள் எவருக்காவது கடமையல்ல; இது கிறீஸ்துவஉண்மைக்கும், அங்கிளிக்கன்சபைத் தத்துவங்களுக்கும் முரண்பட்டதல்ல; நாம் இங்கேசெய்வதெல்லாம் பலஆண்டுகளாக நடைபெற்றுக்கொண்டுவருவதை உறுதிப்படுத்துவதேயாகும்" எனக் கூறியிருக்கின்றார். ஆனால், இந்தச் செபப்புத்தக திருத்தத்தை மேஜர்–ஜெனறல் ரி. வி. அன்டேர்சன்என்பவர் ஆட்சேபித்து, "மரித்தவர்களுக்கான செபங்கள் கிறீஸ்துசமய போதகத்திலே ஓர்கனமான மாற்றமாகும்; இந்தவேளை போதகத்தை மாற்றச் 'சினட்" சங்கத்துக்கு உரிமையிருக்கிறதா?" எனக் கேட்டிருக்கின்றார்.

### இன்னும்பதினொருபேர் மாத்திரமே

மூன்றரைவருடகாலம் கம்யூனிஸ்த சிறைச்சாலைஒன்றில் சிறைவாசஞ் செய்தபின் ஓர்அமெரிக்க யேசுசபைக்குரவரான வண. ஆர்மன்ட் புரோல்க்ஸ் சுவாமியார் சீனச்சிவப்பர்களாலே நாடுகடத்தப்பெற்றுச் சில தினங்களின்முன் ஹொங்கோங் தீவுபோய்ச்சேரலாயினர். ஓர்காலம் எல்லாமாக 300 அமெரிக்க கத்தோலிக்கமிஷனரிமார் தொண்டாற்றிவந்த சீனவில் இவரும் நாடுகடத்தப்பட்டதோடு இன்னும்பதினொருபேரே அங்கு இருந்து வருகின்றனர். உவால்ஷ்மேற்றிராணியார் நீங்கலாக இவர்கள்எல்லோரும் சிறைவாசஞ் செய்துவருகின்றனர். வண. புரோல்க்ஸ்சுவாமியார் தமதுமுதல் ஐந்துவருடங்கள் நீங்கலாக 1924-ம் ஆண்டுமுதல் சீனவிலேயே தொடர்பாகத் திருத்தொண்டாற்றியிருக்கின்றார்.

### 8,000 ஸ்பானிய மிஷனரிமார்

இன்று தென்னமெரிக்க லத்தீனநாடுகளிலே குருமாரில்லாக்குறையே பெருங்குறையாய்க் கத்தோலிக்க உலகமுழுவதுக்கும் பெருங்கவலையைத் தந்துகொண்டிருக்கிறது. அதனால், இன்னும்பத்துவருட காலத்துள் எண்ணாயிரம் ஸ்பானியகுருமார் தென்னமெரிக்க மேற்றிராசனங்களுக்குத் துணையாக அனுப்பிவைக்கப்படவிருக்கின்றனர். இதற்கானதிட்டம் ஒன்றைச் சறகோசாநகர மோர்சில்லா அதிமேற்றிராணியார் செய்திருக்கின்றார். இதன்படி ஸ்பெயினிலே 1,500 பேருக்கும், 1,700 பேருக்கும் இடைப்பட்ட தொகையானகுருமார் வருடந்தோறும் அபிஷேகஞ்செய்யப்படுவார்கள். உள்நாட்டுக் கலகத்தின்போது ஏழாயிரவருக்கு மேற்பட்டகுருமாரை இறக்கக்கொடுத்த அநேகஸ்பானிய மேற்றிராசனங்கள் இன்றுமே போதியகுருமாரின்றிக் கஷ்டப்படுகின்றன. அதனால், இனிமேல்புதிதாக அபிஷேகஞ்செய்யப்படும் ஸ்பானியகுருமார் ஸ்பெயினில் அல்லது தென்னமெரிக்காவில் ஐந்துவருடகாலம் மிஷனரிய தொண்டாற்றுவதற்குத் தங்களைக்கையளிப்பார்கள். 1956-ம்ஆண்டுஅபிஷேகஞ்செய்யப்படும் புதிய குருமாரில் ஐந்தில்ஒருபங்குபேர் ஸ்பெயினிலே குருமார்தேவைப்படும் மேற்றிராசனங்களுக்குச் செல்வர். ஐந்தில்ஒருபங்குபேர் தென்னமெரிக்காவுககுச் செல்வர். 1957-ம், 1958-ம், 1959-ம் ஆண்டுகளில் அபிஷேகஞ்செய்யப்படும்குருமாரில் ஐந்தில்ஒருபங்குபேர் ஸ்பானிய மேற்றிராசனங்களுக்குச்செல்ல ஐந்தில்இருபங்குபேர் தென்னமெரிக்காவுக்குச்செல்வர். 1960-ம், 1961-ம் ஆண்டுகளிலே ஐந்தில்ஒருபங்குபேர் ஸ்பானியமேற்றிராசனங்களுக்குச்செல்ல, ஐந்தில்மூன்றுபங்குபேர் தென்னமெரிக்காவுக்குச் செல்வார்கள்.

### அதிவிருத்தாப்பிய மேற்றிராணியார்

அயர்லாந்திலே கிலாலோ நகர் மேற்றிராணியாராக 51 ஆண்டுகளுக்குமேற்பட விளங்கியிருந்தவரும், ஐரிஷ் மேற்றிராணிமார், அதிமேற்றிராணிமாருள் அதிககாலங்கண்டவருமான பொகாட்ரி ஆண்டவர் அன்று திங்கட்கிழமை தமது 96-ம் வயதிலே காலஞ்செல்லலாயினர். இவர் அர்ச். பத்தாம் பத்திநாதராலே ஓர் மேற்றிராணியாராக்கப் பட்டபோது அயர்லாந்திலே அதிகம்இளவயதுடையவராய் இருந்தார். இற்றைக்கு ஏழுவருடங்களுக்கு முன்புவரையில் தனிமையாகவே இவர் தமதுமேற்றிராசனத்தைப் பரிபாலனஞ் செய்துவந்தார். பின்னர் துணைமேற்றிராணியாரைப் பெற்றுக்கொண்டார். இவர் சென்றவருடம் புரட்டாசிமாதம் தமது மேற்றிராணித்துவ 50-ம்வருட தங்கயூபிலியைக் கொண்டாடினர்.

---

● நமதுஇரட்சகரின் திருக்காயங்கள் பதியப்பெற்ற கீர்த்திவாய்ந்த இத்தாலியகுரவரான வண. பியோசுவாமியார் சமீபத்திலே தமது 68-வதுபிறந்த பெருநாளைக் கண்டுகளித்தார். சான்ஜியோவான்னி றொத்துண்டோ எனுமிடத்திலுள்ள தமதுஆச்சிரமத்திலே தம்மைச்சந்திக்கவென்று இடையறாது சரிந்து கொண்டிருக்கும் யாத்திரிகர் குழாங்கள் காணக்கூடியதாய்க் கோவிலுக்குவெளியே அவர்திவ்வியபூசை நிறைவேற்றுகின்றார். அதனால், நவமான 'பாரியகோவில்ஒன்றை அங்கே கட்டுதற்கானதிட்டங்கள் செய்யப்பட்டிருக்கின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### மார்கழி மாதம்

**பொதுக் கருத்து:** உலகத்தைப் புனிதப்படுத்தும் கிறீஸ்துவ இயக்கத்துக்காக வேண்டிக் கொள்வது.

**மிஷன் கருத்து:** ஜப்பானிய சர்வ கலாசாலை மாணவர்கள் நேர்மையான கொள்கைகள் ஊட்டப்பெறுவதற்காக மன்றாடிக் கொள்வது.

சத்தியவேத

# பாதுகாவலன்

1955-ம் ஆண்டு
மார்கழி மாதம் 1-ந் திகதி

## சலவாயுக்குண்டும் அணுக்குண்டும் உலக சமாதானமும்

தம்முளே முற்றும்முரணை அரசியற் கொள்கைகளையுடைய வல்லரசுகளான ஐக்கிய அமெரிக்கஅரசும், ரூஷியசோவியற் அரசும் உலகில் நிரந்தரமான சமாதானம் நிலவச்செய்ய வேணடுமென்பதே தங்கள்லட்சியமென்று ஒரேகுரலாய்ப் பெருமுழக்கஞ் செய்கின்றன. முன்னேர்போதுமே இல்லாத விதமாய் மகாநாடுகள் கூடியும், சம்பாஷணைகள்நடத்தியும், ஆங்காங்கு பறந்துபறந்து தூதுகள் சென்றும்வருகின்ற அரசியற் தலைவர்களும் அகிலசமாதானமே தங்கள்லட்சியமெனச்சாற்றி வருகின்றார்கள். ஆனல், இந்த லட்சியம் இன்னுமே கைகூடாத காரணமென்ன? இனிமேலும் கைகூடுமோவென்று சந்தேகப்படுதற்கான காரணமென்ன? அரசுகள்தான் என்ன, அரசியற் தலைவர்கள்தானென்ன, இந்த லட்சியபாதையில் இதயபூர்வமாய், திரிகரணசுத்தியாய் ஒத்துழையாமையேயாகும். ஒன்றுக்கொன்று நம்பிக்கைத் துரோகமும், ஒன்றிலொன்று அவநம்பிக்கையும். ஒருவருக்கொருவர் அச்சபயமும், ஒருவரில்ஒருவர் நித்தியசந்தேகமும். இந்த அவநம்பிக்கையும், நம்பிக்கைத்துரோகமும், அச்சபயமும், நித்தியசந்தேகமும் என்று ஒழியுமோ, அன்றுதான் உலக சமாதானத்துக்கு ஓர்வழிகாண முடியும்.

உலக சமாதானத்தை நிலைநாட்டவென்று உதயமான ஐக்கியநாடுகளின்ஸ்தாபனம்தனது லட்சிய பாதையில் உற்சாகமாக வேலைசெய்துகொண்டு போகிறதுதான். ஆங்காங்கு பல்வேறு நாடுகளுக்கிடையே எழுந்த பல பிணக்குகளைச் சமரசமாகத் தீர்த்து, சுதந்திரத்தைப் பாதுகாத்து, சமாதானஞ் செய்து வைத்திருக்கிறதுதான். ஆனல், ஒருபிணக்குத்தீர மற்றோர் பிணக்கும், ஒரு பிரச்சினைதீர மற்றோர் பிரச்சினையுமாக நவமான பிணக்குகளும், நவமானபிரச்சினைகளும் ஒன்றின்பின் ஒன்ருக முளைத்தெழுந்து உலகசமாதானத்துக்குப் பங்கம்விளைத்துக்கொண்டிருக்கும்போது அந்த ஸ்தாபனந்தான் என் செய்யும்? மத்தியகிழக்கிலோ, அன்றேல் வேறெங்கோ பிணக்குப்பட்டுக்கொண்டு யுத்தகர்ச்சனை செய்துவருகின்ற எகிப்து, இசிறவேல் முதலாம் நாடுகள் தற்போதுள்ள சந்தர்ப்பத்தைப் பயன்படுத்த நன்குஅறிந்திருக்கின்றன. ஆல்பழுத்தால்அங்கே, அரசுபழுத்தால் இங்கேஎன்ற பான்மையாய், அவற்றில் ஒன்றுக்கு அமெரிக்கஅரசு உதவி செய்யப்போனல், மற்றதுசோவியற்ரூஷியாவின் பக்கமாகத் திரும்பி அதன்உதவியை நாடுகின்றது. அதனல்,இந்தநாடுகளும்இருகட்சிகளாகப்பிரிந்து அவற்றிற்குப் பலமளித்து உலகசமாதானத்துக்கு உலைவைக்கின்றன. பொதுவிலே கூறுமிடத்து, சோவியற்ரூஷியா "கொமின்பாம்" எனப்படும் கம்யூனிஸ்த அகிலத்தைக் கலையாதவரையிலே—சர்வதேச மகாநாடுகளென்ற போர்வையிலே கம்யூனிஸத்தைப்பரப்ப எடுத்துக் கொள்ளும் பல்வேறு நடவடிக்கைகளையும் நிறுத்தாத வரையிலே —கம்யூனிஸத்தின் சன்மவிரோதியான அமெரிக்கவரசும் தனது கூட்டுப்பாதுகாப்பு நடவடிக்கைகளை நிறுத்தப்போவதேயில்லை.

அங்ஙனமாக, சமீபத்திலே ஜெனிவாநகரில்கூடிய நான்கு வல்லரசுகளின் தலைவர்கள்மகாநாடு ஆயுதப்பரிகரண விஷயமாய் யாதுமே சாதிக்கவில்லை. அதனல்,அவ்வரசுகள்யுத்தோபகரணங்கள் செய்து குவிப்பதைக் கட்டுமட்டுப் படுத்துவனவாயில்லை. "சமாதானம்வேண்டுமா? யுத்தத்துக்குத் தயாராயிரு" என்ற பழையசுலோகமே இன்னமும் நடைமுறையில் இருந்துவருகின்றது. இதற்கு ஆதாரங்காட்டப் பழையஏடுகளைப் புரட்டவேண்டிய அவசியமில்லை. சோவியற்பிரதமர் புல்கானின் என்பாரும், ரூஷியகம்யூனிஸ்த கட்சியின் முதற்காரியதரிசி குருஷேஎன்பாரும் இந்தியாவிலே சுற்றுப்பிரயாணஞ் செய்து மகத்தான வரவேற்புகள் அளிக்கப்பெற்றுக் குதூகலித்துக்கொண்டிருக்கும் இச்சந்தர்ப்பத்தில் ரூஷியசலவாயுக்குண்டுஒன்று வெடித்தமை இந்தியாவுக்குமே பெருந்திடுக்காட்டத்தை உண்டுபண்ணியிருக்கிறது. இந்தச்சலவாயுக்குண்டு முன்னெப்பொழுதுமே கண்டறியாத சக்திவாய்ந்ததென்று குருஷே புளுகிக்கொண்டார். ஆனல், இந்தக்குண்டிலும் பத்து அல்லது இருபது மடங்கு அதிகமான பயங்கரசக்திவாய்ந்த சலவாயுக்குண்டுகளைத் தாம் கொண்டிருப்பதாக அமெரிக்க நிபுணர்கள் விருதுகூறுகின்றனர். இருஅரசுகளிடமும் இந்தக்குண்டு இருந்துவருவதால் உலகசமாதானம் நிலைபெறுமென்று ஒருபாலார்கூற, மறுபாலாரோ அது முயற்கொம்பாகுமெனக் கூறுகின்றனர். நாம் எவர் கூற்றைநம்பி ஏற்றுக் கொள்வது?

---

## கோவிலுக்குக் கோவில்

அப்போது மேற்குஜேர்மனியிலே பிரான்ஸின் ஆதீனத்தில் இருந்துவந்த பகுதியிலுள்ள ஸ்பையேர்ஸ்நகரிலே பிரான்ஸிய கத்தோலிக்கமக்கள் உபகரித்த பணங்கொண்டு ஓர்கத்தோலிக்ககோவில் கட்டியெழுப்பப் படலாயிற்று. அதற்குப்பதில் பிரான்ஸிலே மான்ஸ் நகரில் ஜேர்மன்கத்தோலிக்கர் உபகரித்த தளபாடங்களையும், தொழிலாளரையும், 20,000 பவுணையுங்கொண்டு ஓர் புதியகோவில் கட்டியெழுப்பப் பட்டிருக்கிறது. இந்தக்கோவில் சென்ற மாதம் கருதினல்கிறென்தி ஆண்டவரால் திறந்துவைக்கப்படலாயிற்று. இதற்குப் பணம் உபகரிக்குமாறு ஜேர்மனியஇளைஞர்கள்அநேகர் சிகறெற்புகைப்பதையே நிறுத்திவிட்டார்களென்றும், ஓர்குடும்பம் ஒருவருடகாலத்துக்குச் சினிமாவுக்குப் போவதையே நிறுத்திவிட்டதென்றும் அவ்வேளை கருதினல் ஆண்டவர் தெரிவித்துநின்றார்.

---

### குருத்துவ வெள்ளியூபிலி

—o—

தற்போது வங்காலைக் கட்டளைக்குருவராய் இருந்துவருகின்ற அதிவண. ஜே.நிக்கலஸ்சுவாமியவர்களும், பேசாலைக் கட்டளைக்குருவராய் இருந்து வருகிற வண. எஸ். எஸ். வில்லவராசிங்கம் சுவாமியவர்களும், அரிப்புக் கட்டளைக்குருவராய் இருந்து வருகின்ற வண. சி. மரியாம்பிள்ளைச் சுவாமியவர்களும், ஊறணிக் கட்டளைக்குருவராய் இருந்து வருகின்ற வண. ஜே. ஏ. இராசநாயகம் சுவாமியவர்களும் நிகழும் மார்கழிமாதம் 22-ந் திகதி வியாழக்கிழமை தங்கள் குருத்துவ வெள்ளியூபிலி விழாவைக் கண்டுகளிக்கவிருக்கின்றார்களெனுஞ் சுபசெய்தியை மகிழ்வுடன் தெரிவிக்கின்றோம்.

---

## போர்த்துக்காலின் ஜனதிபதி

போர்த்துக்காலின் ஜனதிபதியாகிய ஜெனறல் கிறூவேய்றோலோப்பெஸ்அவர்கள் சமீபத்திலே லண்டன்நகருக்கு விஜயஞ்செய்தபோது, இங்கிலாந்தின் அதிகம்புராதன நேசநாட்டின் பிரதிநிதியென்றமட்டிலே அந்நகர்அவருக்கு மனப்பூர்வமாக வரவேற்பு அளிக்கலாயிற்று. போர்த்துக்கால்நாடு கடந்த 600 வருடங்களாக இங்கிலாந்துக்குப் பிரமாணிக்கமுள்ள ஓர்நண்பனய் இருந்துவருகிறது. ஜனதிபதியின் இந்தவிஜயமானது ஆங்கில கத்தோலிக்கமக்களால் விஷேசவிதமாக வரவேற்கப்பெற்றதொன்றாகும். அதற்குக்காரணம், அவர்களின்முன்னேர்கள் இங்கிலாந்திலே சமயவிஷயமாகத் துன்புறுத்தி இம்சிக்கப்பட்டகாலத்தில் போர்த்துக்கேயமக்கள் அபயமளித்து, அவர்களை வெகுவாகஉபசரித்து வந்தமையேயாம். இதுதவிர [illegible] ஆங்கிலகுருமடத்திலே ஆங்கிலகுருமார் 17-ம் நூற்றாண்டுமுதல் பயிற்றப்பட்டு வந்திருக்கிறார்கள். இங்கிலாந்திலே கத்தோலிக்கர் இடுதண்டம் பிடிதண்டமாக நடத்தப்பட்டு வந்தகாலத்தில்போர்த்துக்கால் ஆங்கில கன்னியாஸ்திரீமாரின் கன்னிகாமடங்களால் தேங்கியிருந்தது. போர்த்துக்காலை ஆட்சிசெய்தவர்கள் சிலகாலங்களில் வேதவிரோதிகளாயிருந்து—விசேஷமாகப் 18-ம்நூற்றாண்டிலே பொம்பாலும், 1910-ம் ஆண்டு பிறிமேசன்களும் திருச்சபைக்கு இடுக்கண் செய்தபோதிலும் 600 ஆண்டுகளாக ஆங்கிலகத்தோலிக்கரின் நண்பர்களானபோர்த்துக்கேயர்கள் கடந்த 1500 ஆண்டுகளாக உத்தமகத்தோலிக்கராய் இருந்து வருகின்றார்கள். தேவதாயார் காட்சியளித்த பாத்திமாபதியைத் தன்னகத்தே கொண்டுள்ள போர்த்துக்காலின் பிரதிநிதியென்றமட்டிலும் அதன் ஜனதிபதியின்விஜயத்தை ஆங்கிலகத்தோலிக்கர் மனேற்சாகமாக வரவேற்றார்கள். எலிசபேத் மகாராணியார் அவரை வரவேற்றபின் இருவருமாக ஓர் மோட்டர்வாகனத்திலே அன்று செவ்வாய்க்கிழமை பக்கிங்காம் அரண்மனையை நோக்கி வீதியுலாப்போந்தகாட்சி பெரிதும் அருட்சிக்குரியதாய் இருந்தது.

---

✻ ரூஷியாவின் பாதுகாவலர் யார்?

அதிதூதரான அர்ச். மிக்கேல்சம்மனசானவரே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# செபமாலைத் தியானம்

## மோட்சானந்த இரகசியங்கள்

— M. J. M. —

கத்தோலிக்க திருச்சபையின் இரண்டாயிரம்வருட சரித்திரத்தில் கிறீஸ்துவர்களுடைய பத்தியருட்சியைக் கிள்ளி அருட்டிவிடப் பூசைப்பலி, தேவதிரவிய அனுமானங்களின்பின் செபமாலைப்பத்தியை யொத்தது வேறொன்றில்லை. கன்னிமரியம்மாள் பலமுறை தரிசனந்தந்து செபமாலைப்பத்தியை அனுசரிப்பது தமக்கு மிகவும்பிரியமானதென்றும், தமது மன்றாட்டுப் பலனையடைய மிகவும் வாய்ப்பானதென்றும்கூறியிருக்கிறார்.

ஆகையால், இப்பத்தியில் கரிசனைகொள்ளுவோம். கொள்ளுவதற்கு மேல்வருந்தியானங்கள் உதவும்.

### 1. உத்தானம்

"மறுபடி எழுந்தார்."

யேசுவின் அடியாரும், சீஷரும், ஒருவகையிலே பரமபிதாவுங்கூட அவரை அவர்சத்துராதிகள்வசம் கைவிட்டார்கள். அவர் சிலுவையில் மரணித்தபோது, அவரைக்கொலைசெய்த பாதகர் அவரைத் தொலைத்துவிட்டதாக எண்ணினார்கள்.

ஆனால், அவர் மூன்றாம்நாள் மரணித்தோரைவிட்டு உயிர்த்தெழுந்தார்.

கைநெகிழப்பட்டவர் செயசீலராய் எழுந்தார். ஏனெனில், தேவசித்தத்தை அவர் நிறைவேற்றினார்.

செபமாலை இராக்கினி! நாம் சகலராலும் புறக்கணிக்கப்பட்டு நம்பிக்கையை இழந்துபோகும் தருவாயிலிருக்கும்போது, நாம் தேவசித்தத்தை நிறைவேற்றினால் உமதுகுமாரன் யேசுவின் பேறுகளின்நிமித்தம் நாமும் வெற்றியடைவோம் என்பதை எமக்கு நினைவூட்டியருளும்.

### 2. மோட்சாரோகணம்

"போய்ச் சுவிசேஷத்தைப் போதியுங்கள்."

யேசு மோட்சத்துக்கு எழுந்தருளுமுன் ஒலிவேத்மலையில் நின்றுகொண்டு தமதுகடைசிப் போதனையாக, "உலகத்திற் போய்ச் சுவிசேஷத்தைப் போதியுங்கள்" என்றார்.

இப்படியே சீஷருக்கும், அவர்களிடமாய்வரும் குருமாருக்கும் தேவஇராச்சியம் பூலோகத்தில் பரம்பத்தக்கதாகச் சுவிசேஷத்தைப் போதிக்குங்கடமை சுமத்தப்பட்டது. ஆனால், கத்தோலிக்கராகிய நாம் பூரணகிறீஸ்துவ சீவியத்தை நடத்தாவிடில் அவர்களுடைய முயற்சியெல்லாம் வீணாகும். ஏனெனில், கிறீஸ்துவர்களுடைய சீவியத்தையும், முயற்சியையும் பார்த்துத்தான் திருச்சபையின் தன்மையைப் பிறசமயிகள் கணிப்பதுண்டு.

செபமாலை நாயகி! எங்கள் அர்ச்சிப்புக்காகவும், பிறர்இரட்சிப்புக்காகவும் உத்தமகத்தோலிக்கராய் நாம்சீவிக்க எமக்கு நல்ஏவுதலைத் தந்தருளும்.

### 3. பரிசுத்தஆவியின் வருகை

"நெருப்புக்கொழுந்துகள் அவர்கள் மேல் தங்கின."

பெலவீனரையும், பயங்கொள்ளிகளையும், வீண்பெருமை தேடுகிறவர்களையும், பொருளாசைக்காரரையும் — அதாவது தலைமைதாங்கத் தகுதியற்றவர்களைத் தமது சீஷராக யேசு தெரிந்துகொண்டார்.

ஆனால், பரிசுத்தஆவி அவர்களிடம்வந்தபின், மனத்தைரியம் நிறைந்த வீரர்களாய்மாறி, "யேசுவின் நாமத்துக்காகக் கஷ்டப்படுவதில் சந்தோஷமடைந்தார்கள்." எழுத்தறிவற்ற அப்பாமரர் பாண்டித்தியம் நிறைந்த சான்றோராகி, வேதவாஞ்சையால் உந்தப்பெற்றார்கள்.

செபமாலை நாயகி! காத்திரமான கருமங்களிற் கையிடுமுன் பரிசுத்தஆவியின் நல்ஏவுதலை நாம் நாடச்செய்யும். கத்தோலிக்கசமயத்துக்குமாறான முயற்சிகள் நடக்கும்போதும் உம்முடையஉதவியுடன் நாம்வெற்றியடைவோமென்று தைரியங்கொள்ளச்செய்யும்.

### 4. மோட்சாரோபணம்

"இந்தப் பரதேசங் கடந்த பிற்பாடு........"

யேசு மோட்சத்துக்கு எழுந்தருளியதுடன் பூலோகத்தில் அவர்நிறைவேற்றவந்த வேலை முடிவடைந்தது. கன்னிமரியம்மாளுக்கோவெனில் அதுபரதேச சீவியத்தின் ஆரம்பமாகியது.

ஏனெனில், அவர் திருமகனிடமிருந்து பிரிக்கப்பட்டார். ஆயினும், பாலத் திருச்சபையைப் பாதுகாப்பதற்காகப் பூலோகத்தில் வசிக்க மனமொருமித்தார்.

கிருபைதயாபரத்தின் இராக்கினியே! குடும்ப செபமாலைப் பத்தியை அனுசரிக்க நாம் முன் செய்த வாக்கைப் புதுப்பிக்கிறோம்.

இந்தப்பரதேசங் கடந்தபிற்பாடு உம்முடைய திருஉதரக் கனியான யேசுவின் தரிசனத்தை எங்களுக்குக் [illegible]

### 5. மகுடந்தரித்தல்

"பரலோக பூலோக இராக்கினி."

பரலோக பட்டவர்த்தனர் கூடியசபையிலே மரியம்மாள் பரலோகஇராக்கினியாக முடிசூட்டப் பெற்றார். தூதரும், முக்தரும் அவருடைய மகிமையை மகிழ்ச்சியுடன் பாடினர்.

பரலோகத்தில் செயசீலியாய் வீற்றிருந்தாலும் மரியம்மாள் தாம் மனிதரின்மாதாவும், அரசியுமென்பதை மறக்கமாட்டார். ஆனதுபற்றியே பூலோகத்தில் வந்து அடிக்கடி எம்மைத்தரிசிக்கிறார்.

செபமாலை இராக்கினி! எங்கள்மாதாவும், மத்தியஸ்தியுமானவரே! தேவசிம்மாசனத்தண்டை எமக்காகப் பரிந்துபேசி, நாம்பூலோகத்தில் எந்தநிலைபரத்திலிருந்தாலும் அது பரலோகத்தைத்தேட நமக்கோர் சந்தர்ப்பம்என்று நாம் நினைந்து கொள்ளச் செய்யும்.

---

## நானா சங்கதிகள்

● இந்தியாமுழுவதிலும் பூரணமதுவிலக்கு நடைமுறைக்குக் கொண்டுவரப்பட்டால் அரசாங்கத்துக்கு வருடந்தோறும் 200 கோடிரூபா நஷ்டம் ஏற்படுமென்று நிதிமந்திரியான திரு. தேஷ்முக் அவர்கள் அறிவித்திருக்கின்றார்.

● பாத்திமாபதியிலே தேவதாயாரின் திருசேத்திரத்திற்குச் சமீபமாக இருந்துவருகின்ற ஆஸ்பத்திரியில் மேலும்இருபுதிய மேல்மாடித்தளங்கள் அமைக்கப்படவிருக்கின்றன. பெரியயாத்திரைகளிற்சேர்ந்து அங்கு செல்லுகின்றநோயாளர்களின்தொகை அதிகரித்துவருவதாலே இவ்விதம் அதனைப் பெரிதாக்கவேண்டிய அவசியம்ஏற்படலாயிற்று.

● லண்டன்நகரிலே ஈஸ்றஎன்ட் பிரசவசாலையில் சென்றமாதம் 25-ந்திகதியன்று ஓர்குழந்தைபிறந்தது. இதுவே பிரித்தானியதேசத்தில் பிறந்த அதிகஞ்சிறியகுழந்தையாம். இதன்நீளம் 14 அங்குலம். நிறை 1 றாத்தல் 9 அவுண்ஸ். இதன்தலை ஒருடென்னிஸ் பந்தைவிடச் சிறியது. வயிறு 2 அவுண்ஸ் பாலுக்குமேல் கொள்ளாதாம்.

● போர்த்துக்காலின் கரைக்கு அப்பால் பெயால்என்ற சிறிய தீவிலுள்ள பெற்றீய்றாவின் விசாரணைப்பங்குக் குருவரான வண. மனுவேல் ஹட்றுகாசுவாமியார் தமது 100-ம் வயதிலும் இன்னுமே தேவதொண்டாற்றி வருகின்றார். சமீபத்திலே இவர் தமது 100-ம்வருட பிறந்த பெருநாளைக் கொண்டாடியபோது பரிசுத்தபாப்பரசர் அவருக்கு ஓர் சோபனவாழ்த்துச் செய்தி அனுப்பியிருந்தார்.

● மேற்குஇந்தியாவிலே பிரபலபந்தையக்குதிரைகளின் சொந்தக்காரரான குவாலியர்மகாராஜா இப்பொழுது மேரி இலியனோர்என்ற பேரான பந்தையக்குதிரையை 50,000 ரூபாவிலை கொடுத்து வாங்கியிருக்கின்றார். இந்தக்குதிரை பூனாவிலும், பம்பாயிலும் நடந்த பந்தயஓட்டங்களில் வெற்றி[illegible]விளங்கலாயிற்று.

## சுதேசவர்த்தமானம்

### காலநிலை

சென்றசெவ்வாய்க்கிழமை பெய்யத்தொடங்கியமழை அடைமழையாகப் பெய்துகொண்டிருக்கிறது. நேற்றைத்தினம் பகலும்இரவும் மழையோடு கடும்புயல் வீசியமையாலே ஆங்காங்கு மரங்கள் விழுந்தும், வேலிவாசல்கள் அழிந்தும், மின்சாரக்கம்பிகள் அறுந்தும் பலவிதசேதங்கள் ஏற்பட்டிருக்கின்றன. இன்னுமே காற்று அமர்ந்தபாடில்லை.

### அரசாங்க மொழிப்பிரச்சினை

சிங்களம் மாத்திரமே அரசாங்க மொழியாக வேண்டுமென்ற பிரேரணைபற்றி வருகிறமாசிமாதம் 17-ந்திகதியன்று நடைபெறவிருக்கும் ஐக்கிய தேசியக்கட்சியின் வருடாந்த மகாநாட்டில் முடிவுசெய்யப்படவிருக்கிறது. இலங்கையின் அரசகருமமொழியாகச் சிங்களம் ஆக்கப்பட வேண்டுமென்று கேட்கும் திரு. டி. சி. டபிள்யூ. கன்னங்கரா கொண்டுவரும்பிரேரணை அம்மகாநாட்டில் எடுத்தாளப்படும். தனியாட்சி உரிமையுள்ள ஓர்தமிழ்நாடு, அல்லது ஓர்சமஷ்டி அரசியல் வேண்டுமென்றுகேட்டுத் தமிழ்அங்கத்தவர்கள் சமர்ப்பித்திருக்கும் பிரேரணையும் அதேமகாநாட்டில் எடுத்தாளப்படும்.

### பிரபலநியாயவாதியின் மரணம்

யாழ்ப்பாணத்திலே பிரபலநியாயவாதியாக நெடுங்காலம் விளங்கியிருந்தவரும், அப்புக்காத்து தம்புதுரைச்சாமியெனப் பிரஸ்தாபமாக அறியப்பெற்றிருந்தவருமான திரு. எஸ். டி. தம்புஅவர்கள் சென்ற 23-11-55 புதன்கிழமைமாலை மானிப்பாய்ஆஸ்பத்திரியில் காலஞ்செல்லலாயினர். இவர் காலஞ்சென்ற திரு. ரி. எம். தம்புநீதவான் அவர்களின் புதல்வர். இவர் 1901-ம் ஆண்டுமுதல் நியாயவாதியாக யாழ்ப்பாணத்தில் கடமையாற்றிவந்தார். யாழ்ப்பாணத்திலே சுப்பிறீங் கோட்டுவழக்குகளில் ஈடுபட்டு மிகவும் பிரசித்திபெற்ற இவரதுநியாயவாதிக்கும்திறமையை அறியாதார் யாழ்ப்பாணத்தில் இல்லையெனலாம். இவரின் பிரிவாற்றாது வருந்துவாருடன் நாமும் அனுதாபப்படுகிறோம்.

### அதிசிரேஷ்டதாயாரின் விஜயம்

திருக்குடும்ப கன்னிகா சபையின் அதிசிரேஷ்டதாயாரான அதி சங். யேசுவின் இளேயர்தாயார் சென்ற சனிக்கிழமைபிற்பகல் யாழ்ப்பாணத்துக்கு விஜயம்செய்தபோது, அச்சபையைச்சேர்ந்த சங். கன்னியாஸ்திரீமாரும், அவர்களால் நடத்தப்பெற்றுவரும் கலாசாலைகளைச்சேர்ந்த ஆயிரக்கணக்கான பிள்ளைகளும், இவர்களின் தாய்மாரும் யாழ்ப்பாணத் திருக்குடும்ப கன்னிகாமடத்து முன்வாயில்பெருவீதியிலே காத்துநின்று மங்கலகரமாக அவரைவரவேற்று நின்றார்கள். பின்னர் மடத்துக்கலாசாலை மண்டபத்திலே அவருக்குப் பெருமிதமான வரவேற்புஒன்று அளிக்கப்படலாயிற்று. அன்றுமுதல் அதிசிரேஷ்டதாயார் யாழ்ப்பாணக்குடாநாட்டிலுள்ள பல்வேறுமடங்களையும், பாடசாலைகளையும் தரிசித்துவருகின்றார். வருகிறஞாயிற்றுக்கிழமை சாயந்தரம் கொழும்புத்துறை ஆசிரியகலாசாலையிலே அவருக்கு ஓர்பரிமளிப்பான வரவேற்பு அருளப்படவிருப்பதாக அறிகின்றோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அழைப்புக் குரல்

— ம. ஆசீர்வாதம் சுவாமிகள், S. J. —

நள்ளிரவில் எழுந்தது அந்த அழைப்புக் குரல். உள்ளத்தை உருக்கும் குரல். சாதாரண இளைஞன் தான் அவன். நற்குணங்கள் படைத்தவன். அவனது அடக்கம், ஒடுக்கம், ஒழுக்கம், வீரத்துவம், புத்திக்கூர்மை முதலியவற்றைக்கண்டு எல்லோரும் மெச்சினர். ஆனால், அவர்களது புகழ்மொழியைப் பொருட்படுத்தினனில்லை. எல்லாவற்றிலும் ஆண்டவருக்கு உகந்தவனாய்ஒழுகி அவரது ஆசியைப் பெற ஆசித்தான். வெளிததோற்றத்தில் மற்றவர்களை விட எவ்விதத்திலும் வேறுபட்டிராத அவ்விளைஞன் நமதுநாதர் முன் ஒருவீரனாய்விளங்கினான். தனது ஆசாபாசங்கள், உலகம்பிசாசு இவைகளிடமிருந்து வரும்சோதனைகளை வீரத்துடன்எதிர்த்துச் சமர்புரிந்தான். தேவ அருளின் உதவியினால் வெற்றியும் பெற்றுவந்தான்.

என்றுமில்லாதவிதமாய் அன்று அவன் மிகவும்களைத்துத் துயில்கொள்ளச்சென்றான். துரிதமாய்த் தூங்கி விட்டான். தூக்கத்தில் ஒருகனவு. கனவில் ஒருகுரல். வெகு தூரத்திலிருந்து வந்தது. தொடர்ந்து கேட்டுக்கொண்டிருந்தது. மெதுவாக நமதுவீரன்எழுந்து படுக்கையில் உட்கார்ந்தான். அதேகுரல் இன்னும் கேட்டுக்கொண்டிருந்தது. அந்த நள்ளிரவில் அவன்உள்ளத்தில் அச்சத்தை மூட்டுவதற்குப்பதில் இரக்கம்சுரக்கும்படி செய்தது அக்குரல். வேதனையால் அவதிப்படும் ஒருவனின் குரல் அதுஎன்பதை உணர்ந்தான். எங்கிருந்துதான் அதுவந்ததோ? குரல்வந்த திசையை நோக்கித் தனிமையாகநடந்தான். காந்தம்போல அந்தக்குரல் அவனைப் பற்றி இழுத்தது. மாணவர் விளையாடும் மைதானத்தைக்கடந்து, அருகிலிருக்கும் குன்றைநோக்கி நடந்தான். அந்த இருளிற்தானும் குன்றின்மீது ஏதோ ஒன்று தென்பட்டது. குரல் அங்கிருந்து வந்ததால் அதைநோக்கி விரைந்தான். அவன்கண்டது ஒருசிலுவை. அதன்மீது ஒருமனிதன். உச்சியிலிருந்து உள்ளங்கால்வரை அவரை நோக்கினான் நமதுஇளவல். தலையில் முண்முடி. விலாவில் ஈட்டிதிறந்த காயம், கைகால்கள் ஆணிகளாற் துளைக்கப்பட்டிருந்தன. உடம்பு முழுவதும் இரத்தம்சிந்தும் காயங்கள். அவரது திருமுகத்தில் கோபமல்ல, அன்பும், வருத்தமுமே காணப்பட்டன. தம்மை இறக்கிவிடும்படி உருக்கமாய் வேண்டிக்கொண்டே அவர் அங்கு தொங்கினார்.

நமதுஇளவலின் உள்ளத்தில் ஒரு கொந்தளிப்பு எழுந்தது. உயிர்த்தபின் மகிமைமாட்சியில் அரசுசெலுத்தும் கிறீஸ்துநாதர் சிலுவையில் தொங்குவது எங்ஙனம்? அவனதுஉள்ளத்தில் உதித்து, உறுத்திக்கொண்டிருந்த எண்ணத்தைஅறிந்தஆண்டவர் அவனை நோக்கி, "மகனே! உயிர்த்துப் பிதாவின் வலதுபாரிசத்தில் வீற்றிருக்கிறேம் என்பது உண்மை; ஆனால், நாமும், திருச்சபையும் ஒன்றே; திருச்சபை நமது மறைஉடல்; நாம் அதன் சிரசு; ஆதலின் திருச்சபையையும், நம்மையும் பிரித்துஎண்ணுதல் சரியன்று என்பதை மறந்தனையோ? அவஸ்தையால் திருச்சபை அங்கலாய்க்கின்றது; பலதேசங்களில் திருச்சபை சிலுவையில் ஏற்றப்பட்டிருக்கின்றது. அதேசமயம் அதன்சிரசாகிய நம்மையும் சிலுவையில் திரும்பவும் அறைகிறார்கள்; நம்மீதுள்ளபகையை நமது மறைஉடலாகிய திருச்சபைமீது தீர்த்துக்கொள்ளுகிறார்கள் நமதுஎதிரிகள்."

வீரன் அவரதுதிருப்பாதங்களைப் பற்றினான். முத்தங்கள்பல அன்புபொழியப் பெய்தான். அன்பினால் உண்டான வீரத்துடன், அவரை அக்கழுவிலிருந்து இறக்க ஆரம்பித்தான். "மகனே! நில்" என்ற குரல்கேட்டு நிமிர்ந்தான்.

"வீரமகனே! உன்னால்மாத்திரம் இதைச்செய்ய முடியாது."

"ஆண்டவரே! நான் என்னதான் செய்யவேண்டும்? உம்மை இந்நிலையில்காணச் சகிக்கமுடியவில்லையே."

"போ மகனே! உலகத்தின் எத்திசைக்கும்போ; சிலுவையில்தொங்கும் ஒருவன் உங்கள்உதவியை நாடுகிறான் என்று எல்லோரிடமும்சொல்லி அவர்களை அழைத்துவா; நம்மை இச்சிலுவையில் ஏற்றிவைத்தமக்கள் எல்லோரும்வந்து இறக்கினாலொழிய, இம்மரத்திலிருந்து இறங்கமாட்டோம்."

மறைஉடலின் மறைபொருளை அக்கனவிலிருந்து உணர்ந்தான். அவனுடையவாழ்க்கையின் குறிக்கோள் தெளிவானது. அவ்வீரன் பலதிசைகளுக்குச்சென்றான். பலரைக் கல்வாரிக்குன்றுக்கு அனுப்பினான். விசுவாசப் பரப்புதல்அலுவலில் இறங்கினான். ஒவ்வொருவர்உள்ளத்திலும் கிறீஸ்துநாதர் ஆட்சிசெய்யப் பாடுபட்டான். அவனைப்போன்றபலர் இன்னும் எத்திசைக்கும்சென்று மக்களை அக்குன்றுக்கு அழைத்துவருகின்றனர்.

ஆனால், இன்னும்யேசு சிலுவையை விட்டு இறங்கவில்லை. ஏன்? உலக மக்களில் ஐந்தில் நான்கு பாகத்தவர் இன்னும் கிறீஸ்துவுக்கு மிகவும்தூரத்தில் இருக்கிறார்கள். இவர்கள்எல்லோரும்சேர்ந்து வந்தாலொழிய நமதுநாதரைச் சிலுவையிலிருந்து இறக்கமுடியாது. அவரும் இறங்கிவர மாட்டார்.

கிறீஸ்துவவீரர்களாகிய நீங்கள் என்னசெய்கிறீர்கள்? சிந்தித்துப் பாருங்கள். நமக்காகத் தமதுஉயிரைக்கொடுத்த யேசுவுக்கு நாம் என்ன செய்திருக்கிறோம்? என்ன செய்யப் போகிறோம்?

அவ்வீரனுக்கு விடுத்த அழைப்பை அவர் நமக்கும் விடுக்கின்றார். உலக முழுவதும் கிறீஸ்துநாதரின இதயத்தை அணைக்கக் காத்திருக்கும் கரங்களுள் வந்துசேரவேண்டும். அந்த அலுவல் உங்களிடம் ஒப்படைக்கப்பட்டிருக்கிறது. உங்கள்முன் உள்ள வேலை இலேசானதல்ல. தன்னைமுழுவதும் அர்ப்பணம் செய்யத் தயங்காத வீரமகனுக்குரியவேலை. கிறீஸ்துநாதரின் அரசைப்பரப்பவேண்டியது நமதுகடமை. கிறீஸ்தவன் (கிறீஸ்து அவன்) என்ற பெயருக்கு அருகதையாக வேண்டுமாயின், கிறீஸ்துவைப் பிரதிபலிக்க வேண்டும். உங்கள் உள்ளத்தில் கிறீஸ்துநாதரின் எண்ணம் பதிந்திருக்க வேண்டும். உங்கள்பேச்சில் கிறீஸ்துநாதரின்மொழி ஒலிக்கவேண்டும். உங்கள்செயலில் கிறீஸ்துநாதர் செயலாற்ற வேண்டும். கிறீஸ்துநாதரின் அரசை உங்கள் இருதயத்திலும், மற்றவர்கள் இதயத்திலும் நிலைநாட்டுவதே உங்கள் முதற்கடமை.

கிறீஸ்துநாதர் அழைக்கின்றார். அழைப்புக்குச் செவிசாய்த்து, அவரதுஆட்சி மற்றவர்கள் இதயத்திலும் ஸ்தாபிக்கப்பட நாம் பாடுபட்டால், அவரது மறைஉடலாகிய திருச்சபை சிலுவையிலிருந்து இறங்கும்.

( கி. இ. தூதன் )

## ஏனோ அலைந்தேன்?

வாழ்வெனும்பூங் காவினிலே
வண்ணமலர்த் தேன்பொழியச்
சூழுமிடர்க் கானகத்தே
சுற்றித் திரிந்தலைந்தேன்.

விண்மதிவெண் பொன்சொரிய
வெள்ளிநிரைக் கதிரொளிரக்
கண்ணிழந்து பாழிருளிற்
கலங்கித் திரிந்தலைந்தேன்.

தண்ணருவி பண்ணிசைத்துத்
தவழ்ந்துபனிக் குளிர்ச்சிதர
மண்ணெரியும் பாலையிலே
மயங்கித் திரிந்தலைந்தேன்.

அன்பொழுகு மென்கரங்கள்
அழைத்தருகே யணைத்திடவும்
என்மனமுங் கல்லெனநான்
ஏனோ? திரிந்தலைந்தேன்.

— 'ஜெயம்'

## பழையஏற்பாடு பிரதிசெய்யப்பெற்ற புராதன ஆச்சிரமம்

பலஸ்தீனாவிலே சவக்கடலின் மேற்குக்கரையிலுள்ள கீர்பெற் குவம்றன் எனுமிடத்திலே நிலத்தை அகழ்ந்து நடத்திய ஆராய்ச்சியின்போது, சவக்கடலையடுத்த குகைகளிலே சமீபகாலங்களில் கண்டெடுக்கப்பட்ட பழையஏற்பாட்டின் கையேட்டுப் பிரதிகளைச் சங்கிரகஞ்செய்த யூதவகுப்பினராகிய எசேனியர்களின் இடிகரையான "ஆச்சிரமம்" கண்டறியப்பட்டிருக்கிறது. எசேனியர்கள் முதன்மைவாய்ந்த மூன்று யூதவகுப்பினருள் ஒருவகுப்பினராவர். பரிசேயரும், சதுசேயருமே ஏனையஇருவகுப்பினர்கள். கீர்பெற் குவம்றன் எனுமிடத்தில் வசித்திருந்தவகுப்பினர் இறுதியாகக் கி. பி. 68-ம் ஆண்டு அங்கிருந்தும் துரத்திவிடப்பட்டனர். அதனால், இந்தப்பழையஏற்பாட்டு வேதாகமஏட்டுப்பிரதிகள் அதற்குமுன்னரே—அதாவது சுமார் 2000 வருடங்களுக்குமுன்னரே எழுதப்படலாயின. இடிகரையான இந்தஆச்சிரமத்தில் கண்டெடுக்கப்பட்டுள்ள நாணயங்களெல்லாம் கி. மு. 2-ம்நூற்றாண்டிலே அதற்கு அத்திவாரம் இடப்படலாயிற்றென்பதைக் காண்பிக்கின்றன. இந்தஆச்சிரமம் இருபாரியகட்டடங்களைக் கொண்டிருந்ததென்பது ஆராய்ச்சி மூலம் தெளிவாயிருக்கிறது. இவைகள்இரண்டும் ஓர்திறந்தவெளியாலே பிரிக்கப்பட்டு, இந்தவெளியைச்சூழவர அச்சமுதாயமக்களின் வாசஸ்தலங்களும், தொழிற்சாலைகளும் நிரைப்படுத்தப்பட்டிருக்கின்றன. ஓர் அறையானது, இன்றுமே நல்லநிலைமையில் இருந்துவருகின்றது. தொழிற்சாலைஒன்றில் செய்யப்பட்ட ஆயிரத்துக்குமேற்பட்ட மட்பாத்திரங்களைக் கொண்டிருக்கின்றது. அங்குகண்டெடுக்கப்பட்ட நாணயங்கள் தீத்துசால் அடிக்கப்பட்ட 500 வெள்ளிநாணயங்களையும் அடக்கியிருக்கின்றன. அங்கு நிலத்தைஅகழ்ந்து 1951-ம்ஆண்டு தொடக்கப்பட்ட இந்த ஆராய்ச்சியானது ஜெருசலேமிலுள்ள வேதாகமகலாசாலையாலும், ஜோர்தான்அரசாங்கத்தின் புராதனப் பொருளாராய்ச்சிப் பகுதியாலும் நடத்தப்பட்டு வந்திருக்கிறது.

---

❊ ரோமைநகரிலே தேவதாயார் பேரால் முதன்முதலாகக்கட்டப்பெற்ற ஆலயம்எது?

அங்கு பிருஸ்தேவேறே எனுமிடத்திலுள்ள சந்தாமரியாஆலயமே. கி. பி. 240-ம் ஆண்டுமுதல் இந்த ஆலயம் அங்கே இருந்துவருகின்றது.

❊ தற்போது உலகிலுள்ள அதிகம்பழமையான பூகோளஉருண்டையைச் செய்தவர்யார்?

மாட்டீன் பிஹாயிம் (1459—1507) அவர்களே. 21 அங்குல குறுக்களவுடைய இந்தப் பூகோளஉருண்டை தற்போது ஜேர்மனியிலே நூறெம்பேர்க்நகரில் பாதுகாக்கப்பட்டு வருகிறது.

❊ தபால்களைமாத்திரம் ஏற்றியிறக்குதற்கென்று தபால்றெயின்வண்டிகள் எங்காவது ஓடுகின்றனவா?

ஆம், பிரித்தானியிலே அப்படியான றெயின்வண்டிகள் அநேகம்ஓடுகின்றன. அவற்றிலே மிகவிசேஷப்பட்டன மேற்குக்கரைநீளம் ஸ்கொத்திலாந்திற்குச் செல்லும் "எக்ஸ்பிறெஸ்" றெயின்களாகும். இவற்றிலே பிரயாணிகள் ஏற்றப்படுவதில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ரோமையின் கல்லறைச் சுரங்கங்கள்

—: வண. டி. எஸ். லூர்துசாமி சுவாமிகள் :—

(சென்றவாரத் தொடர்ச்சி)

இக்கல்லறைச் சுரங்கங்களில் இறங்குவதற்குமுன், வெளியே சிறுகோவில் ஒன்று இருக்கிறது. இக்கோவிலிற்றான் அக்காலத்தில் அர்ச். செஃபிரினுஸ்என்ற பாப்பாண்டவரும் (கி. பி. 199—217), அர்ச். தார்சீஸியஸ் என்ற நற்கருணைவேதசாட்சியும் அடக்கஞ்செய்யப்பட்டிருந்தனர். இக்கோவிலைக்கடந்து சுரங்கங்களுள் இறங்கிச் செல்ல இப்போது படிகள் அமைத்துள்ளனர். சுரங்கங்களில் ஆங்காங்கு மின் விளக்குகளும் உள்ளன.

படிகளைத்தாண்டி முதல்அடுக்கில் இறங்கியதும் இருஅறைகள் குறுக்கிடுகின்றன. இவைகள்: முதல்நூற்றாண்டில்மரித்தபதினொருபாப்புமார்கள் அடக்கஞ்செய்யப பட்டிருக்கும் கூடமும் (Cubiculum Pontificium or Papal Crypt), அர்ச். செசிலியம்மாள் அடக்கஞ்செய்யப்பட்டிருந்த அறையும். இப்புனிதவதியின் அழியாத்திருவுடல் இப்போது அங்கு இல்லை. அதை வெளியேஎடுத்துச் சென்று, அவள் வேதசாட்சியாக மரித்தஇடத்தில் எழுப்பப்பட்டுள்ள பேராலயத்தில் பூசிதமாக வைத்திருக்கின்றனர். அதற்குப்பதிலாய்ச் சுரங்கத்திலே அவள் வேதசாட்சியாக இறந்துகிடக்கும் பாவனையாகச் சலவைக்கல்லால் அழகிய சிற்பம்ஒன்று செய்து வைக்கப்பட்டிருக்கின்றது. இவ்விருஅறைகளையும் கடந்துசென்றால், "தேவதிரவிய அனுமானங்களின் சிற்றாலயங்கள்" (Chapels of the Sacraments) எனப்படும் ஐந்துகூடங்களைக் காணலாம். அவற்றில் ஞானஸ்நானம், நற்கருணை, பாவசங்கீர்த்தனம், உத்தானம் முதலியவற்றைக் குறிக்கும் சின்னங்களும் நல்லாயன், லாசர், மோயீசன்முதலியோர் சம்பந்தமான ஓவியங்களும் மங்காஒளியுடன் காட்சியளிக்கின்றன. இன்னுமுள்ள பல அறைகளிலே பாப்புமார்களும், வேதசாட்சிகளும், மற்றவர்களும் அடக்கஞ்செய்யப் பட்டிருக்கின்றனர்.

ஒவ்வொருஅறையிலும் பூசைசெய்வதற்கானவசதிகள் அமைக்கப்பட்டுள்ளன. எனவே, ஒரேசமயத்தில் குறைந்தது முப்பதுபூசைகள் ஒப்புக்கொடுக்கலாம். அர்ச். செசிலியம்மாள் பீடமும், பாப்புமார்களின் கூடத்திலிருக்கும்பீடமும் முக்கியமானவை. இப்பீடங்களில் பூசைசெய்யும்போது, மோட்சத்திற்கேசென்று அர்ச்சியசிட்டர்களின் நடுவே பலிஒப்புக்கொடுப்பது போன்ற பேரின்பஉணர்ச்சி மேலிடுகின்றது. நம்மைஅறியாமலே உள்ளத்தில் பக்திரசம் பொங்கியெழுகின்றது.

## அர்ச். செபஸ்தியாரின் கல்லறைச் சுரங்கங்கள்

பிரான்சீஸ்குவின் சபையார் இவற்றைக் கண்காணித்து வருகின்றனர். அர்ச. செபஸ்தியாரும், மற்றும்பல வேதசாட்சிகளும் இங்கு அடக்கஞ்செய்யப் பட்டுள்ளனர். அப்போஸ்தலரான அர்ச். இராயப்பர் இங்கு சிறிதுகாலம் தங்கியிருந்ததாகவும், அவருடையவும், அர்ச். சின்னப்பருடையவும் அருளிக்கங்கள் வேதகலாபனையின்போது தற்காலிகமாக இங்கு பாதுகாத்து வணங்கப்பட்டு வந்ததாகவும் ஆராய்ச்சியாளர் கூறுகின்றனர். இங்குள்ள கல்லறைகளின் மொத்தத்தொகை 1,70,000. வளைந்துவளைந்து செல்லும் சுரங்கங்களின் இருளடர்ந்த நீண்டசந்துகளைக் கையில் மெழுகுவர்த்தி ஏந்தியவண்ணந்தான் சுற்றிப் பார்க்கவேண்டும். தனியேசெல்வதற்குப் பயமாயிருக்கும். மரணநினைவும், உடல்நடுக்கமும் தோன்றும். முதலிலே அர்ச். செபஸ்தியாரின்பீடமும், அவரதுஉருவச்சிற்பமும் வைக்கப்பட்டிருக்கும் அறைஉளது.

சுரங்கவாயிலில் பொருட்காட்சிச்சாலை ஒன்றிருக்கிறது. சுரங்கங்களுக்கு மேல் அர்ச். இராயப்பர், சின்னப்பரின் பெயர்களைத்தாங்கிய பிரமாண்டமான பேரெழில்மிக்க ஆலயம்ஒன்று எழுப்பப்பட்டுள்ளது. அதிலுள்ள பீடங்களுள் இரண்டு ஈண்டுசிறப்பாய்க் குறிப்பிடற்பாலன. ஒன்றில், சிறந்தவேலைப்பாடுகொண்டதாய்க் கலைவளங்கொழிக்கும் அர்ச். செபஸ்தியாரின் உருவச்சிலையானது விலையுயர்ந்த சலவைக்கல்லால் அம்புகள்தைத்து விழுந்துகிடக்கும் மேனையாய்ச் செய்துவைக்கப்பட்டிருக்கிறது. மற்றொரு பீடத்திலே வேதகலாபனைக்குப்பயந்து ரோமையைவிட்டு வெளியேறவிரும்பிய அர்ச். இராயப்பருக்குச் சிலுவைசுமந்தவாறு தரிசனையான நமதுஆண்டவரின் இருகாலடிகள்பதிந்துள்ள கற்பலகைஒன்று பூசிதமாகவைத்துப் போற்றப்படுகின்றது. தரிசனையான இடம் சுமார் அரைமைல் தூரத்திற்கப்பால் இருக்கின்றது. அவ்விடத்தைக் குறிக்க, "ஆண்டவரே! எங்கே போகிறீர்?" (Domine Quo Vadis?) என்றபெயர் தாங்கிய கோவில்ஒன்று அங்கு எழுப்பப்பட்டுள்ளது.

இக்கல்லறைச் சுரங்கங்களைக்கண்டு, தியானித்து, மனமுருகி, மனந்திரும்பி உலகமாய்கைகளை உதறித்தள்ளும் உறுதிப்பாட்டுடன் வெளியேறாத கல்நெஞ்சர் ஒருசிலரேயாவர்.

---

● 1829-ம் ஆண்டு ஸ்ரிபென்சன் என்பவர்கட்டிய "றொக்கெற்" என்ற றெயில்வேஎஞ்ஜின் நாலரைத்தொன் நிறைகொண்டதாய் மணித்தியாலம் ஒன்றுக்குப் பத்துமைல்வேகத்திலே பத்துத்தொன்பாரத்தை இழுத்துச் சென்றது. ஆனால், இன்றோ கனடா தேசத்திலே அத்திலாந்திக்சமுத்திரக் கரையிலிருந்து பசிபிக்சமுத்திரகரைக்குத் 900 தொன்பாரத்தைஇழுத்துக் கொண்டு மூன்றுநாளிலே 3,000 மைல் தூரத்தைக் கடக்கின்ற பாரப்பட்ட கனடியஎஞ்ஜின்கள் இருக்கின்றன.

● ருஷியாவின் தலைப்பட்டணமாகிய மஸ்கோநகரிலே ருஷியபிரிவினைச் சபையைச்சேர்ந்த மிகப்பேரான அர்ச். பேஸிலின் ஆசனக்கோவில் இப்போதும் ஞாயிற்றுக்கிழமைகளில் மக்களால்தேங்கிவருகின்றது. ஆனால், ஆராதனைவழிபாடு நடத்தவல்ல. ஓர்நூதனபொருட்காட்சிச் சாலையாக மாற்றப்பட்டிருக்கும் அதிலுள்ள நூதனகண்காட்சிப்பொருட்களைக் கண்டுகளிப்பதற்காகவே ஞாயிற்றுக்கிழமைகளில் பல்லாயிரக்கணக்கான மக்கள் அதைத்தரிசிக்கின்றார்கள்.

# மாதா நூற்ற நூல்

—: J. S. A. :—

குன்றின்மீதுள்ள மாளிகையிலே உயர்குலப்பிரபுக்களும், சீமாட்டிகளும விருந்துண்ணுகின்றனர். மேசையின் மீது பலதேசங்களிலுமிருந்து தருவிக்கப்பெற்ற பழவகைகளும், பட்சணவகைகளும் வைக்கப்பட்டிருக்கின்றன. பிரான்ஸ்தேசத்திலிருந்து தருவிக்கப்பெற்ற இனிய திராட்சைரசவகைகள் வெள்ளிப்பாத்திரங்களில் நிரப்பப்பட்டிருக்கின்றன. அசனசாலையின் நடுவில் ஓர்உயர்ந்த ஆசனத்தின்மேல் அமர்ந்திருந்த சங்கீதவித்துவான் விருந்தினரைக் களிப்பிப்பதற்காக வீணையை வாசித்துக்கொண்டு இனியகீதங்களைப் பாடுகிறான். இவ்வளவு குதூகலத்திற்கும் காரணமென்ன? அக்குன்றின் அடிவாரத்தைச்சூழவாவுள்ள நிலபுலங்களுக்குச் சொந்தக்காரனாகிய தெகூர்வால்பிரபுவின் ஏகபுத்திரியான யொலாந்தாஎன்னும் பெண்மணிக்கும், தெ தாம்பிறெக்எனும் பிரபுவுக்கும் அன்றுமாலை நிச்சயார்த்தம் நடைபெற்றதே.

குன்றின் அடிவாரத்திலுள்ள கிராமத்திலும் அன்றுதினம் எல்லோரும் ஆனந்தக்கடலில் மூழ்கியவராகவே காணப்படுகின்றனர். அடிமைகளைப் போல அரும்பாடுபட்டு வருடமுழுதும் உழைத்துவரும்மக்கள் அன்றையதினம் தங்கள் கவலைகளையெல்லாம் மறந்து உல்லாசமாகப் பொழுதுபோக்குகின்றனர். ஆனால், ஒருவீட்டில்மட்டும் எவ்வித சந்தோஷமும் காணப்படவில்லை. அவ்வீட்டினுள் ஓர்பெண்மணி ஒருமூலையில்உட்கார்ந்து நூல்நூற்றுக்கொண டிருக்கிறாள். அவள்கண்களில் நீர் ததும்புகிறது. மற்றொருமூலையில் அவள்புருஷன் கடுஞ்சுரங்கண்டு கட்டிலின்மீது படுத்துக் கிடக்கிறான். அப்பெண்மணி நூல் நூற்கையில் அழுதுகொண டிருக்கும் காரணமென்ன? மறுநாட்காலை அவள் குன்றின்மீதுள்ள மாளிகைக்கு நூறு நூற்பந்துகளைக் கொண்டுபோய்க் கொடுக்கவேண்டும். ஏனைய கிராம மக்கள் எல்லோரும் தங்கள் நூற்பந்துகளைத் தயாராக வைத்திருக்கிறார்கள். யொலாந்தாவின் கலியாண உடைக்காகவே இந்தநூற்பந்துகளைக் கிராமவாசிகள் கொடுக்கவேண்டியிருந்தார்கள். அப்பெண்ணின் புருஷன் வியாதியாய்ப் படுத்துவிட்டமையால் அவனுடைய நிலத்தை உழுவதற்கு ஆளில்லாமற் போக, அதில் பயிர்செய்த சணற்செடிகள் பயன்தராமற் போயின. போதிய சணல் வாங்குவதற்கோ அவர்களிடம் கையில் பணமில்லை. நாளையதினம் ஏனைய கிராமவாசிகளைப்போல அப்பெண் நூறு நூற்பந்துகளைக் கொண்டுபோய்க் கொடுக்காவிடின் அவளும், அவள்புருஷனும், பிள்ளைகளும் வீட்டைவிட்டுத் துரத்தப்படுவார்கள்.

தாய் அழுதகண்ணோடு நூல்நூற்றுக்கொண் டிருப்பதைக்கண்ட மிஷேலும், அவன் தங்கையாகிய நிக்கோலும் வீட்டைவிட்டுப் புறப்பட்டு விறகு பொறுக்கக் காட்டுக்குச் சென்றனர். "நமக்கு அதிகவிறகும் வேண்டியதில்லை; வீட்டிலே அதிகநேரம் சுடவைக்கவேண்டிய பதார்த்தம் என்ன இருக்கிறது? வாய்க்குருசியான பண்டங்கள்தின்ற காலமெல்லாம் பறந்துவிட்டது" என்று பெருமூச்சுடன் கூறினாள் நிக்கோல். "ருசியுள்ளபண்டங்கள் இல்லாவிட்டாலும் பரவாயில்லை; நம்மை வீட்டைவிட்டுத் துரத்திவிடுவார்கள் போலிருக்கிறதே; நாளைக் காலை எமதுதாயார் நூறு நூற்பந்துகள் கொண்டுபோய்க் கொடாவிடின் நாம் வீட்டைவிட்டுத் துரத்தப்படுவோமென்று முதலாளியின் காரியதரிசி சொல்லிவிட்டாராம்; கொஞ்சம் சணல் கிடைக்காதபடியால் தானே நமக்கு இந்தக்கஷ்டம் சம்பவிக்கப் போகிறது" என்றான் மிஷேல்.

இவ்வாறு பேசிக்கொண்டு இருபிள்ளைகளும் தரையிற்கிடந்த சுள்ளிகளைப் பொறுக்கிக்கொண டிருந்தனர். பிறகு அவற்றையெல்லாம் ஒன்றுசேர்த்து ஒருகயிற்றால் கட்டியபின் இருவரும் முழந்தாளிலிருந்து இருகைகளையுங் குவித்து, வழமைபோல மூன்று பிரியதததமந்திரம சொல்லத் தொடங்கி, முடிக்காமுன்னரே,

"ஆ, இதென்ன? நம்மிருவரையும் வெள்ளைநார்கள் மூடிக்கொண் டிருக்கின்றன" என்று ஆச்சரியத்துடன் கத்தினான் மிஷேல்.

"இந்தக்காட்டில் சணல்நார் எங்கிருந்து வரக்கூடும்? தேவமாதாவே இவ்வளவுநாரையும் தம்முடையதாறிலிருந்து கீழேவிழவைக்கிறார் என்பது நிச்சயம்" என்றாள் நிக்கோல்.

"அப்படியானால், மாதாவைப் பார்த்து மன்றாடிக்கொண்டால் இன்னுமதிக நாரைப்போடுவா; எல்லாவற்றையும் சேர்த்துக்கொண்டுபோய் அம்மாவிடம் கொடுப்போம்." இருவரும் முழந்தாட்படியிட்டுக் கைகூப்பிச் செபிக்கத் தொடங்கினர்:

"தேவமாதாவே, இன்னுங்கொஞ்சம் நாரைக்கொடுங்கள். அதை நாங்கள் எங்கள்அம்மாவிடம் கொண்டுபோய்க் கொடுப்போம். நாளைகாலை நூறுபந்து நூல் கொண்டுபோய்க் கொடுக்காவிடின் காரியதரிசிவந்து வீட்டைவிட்டு எங்களைத் துரத்திவிடுவார்."

கொஞ்சநேரம் மன்றாடியபிறகு இருவரும் எழுந்துநின்றனர். ஆ, என்ன ஆச்சரியம்! அவர்களைச்சுற்றியிருந்த செடிகளெல்லாம் தூயவெண்நார்களால் மூடப்பட்டிருந்தன. இருவரும் தூக்கிச்செல்லக்கூடிய அளவுக்கு நாரைச் சேகரித்துக்கொண்டு வீட்டிற்குத்திரும்பினர். சூரியனும் அஸ்தமித்துவிட்டது.

வீட்டில்நுழைந்ததும் இருவரும் "அம்மா, அப்பா, தேவமாதா தம்முடையதாறில வைத்திருந்தசணல்நாரையெல்லாம் காட்டில் இறைத்துவிட்டா; இதோபாருங்கள்!" என்று சொல்லிக்கொண்டு தகப்பன்படுத்திருந்த கட்டிலை அணுகினர். அவர்கள் காட்டிலிருந்து எதையோவாரிக்கொண்டு வந்திருக்கின்றனரென்று கருதியதகப்பன் சுளித்த முகத்துடன் அவர்களைப் பார்த்தானேயொழிய, அவர்கள் கொண்டுவந்திருப்பது என்னவென்று கவனிக்கவில்லை. பிள்ளைகளுக்குத் திருப்தியளிக்கும் நோக்கத்துடன் தாய் அவர்கள் கொண்டுவந்த வெள்ளை வஸ்துவைத் தாறில்சுற்றி நூற்கத்தொடங்கினாள். ஆ, என்ன அதிசயம்! பட்டைவிட அதிகசன்னமும், பளபளப்புமுடைய தூயவெள்ளைநூல் புறப்படுவதைக்கண்டாள். பிள்ளைகள் குதூகலத்துடன்

(அடுத்த பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இந்திய கத்தோலிக்க பிரசுரங்கள்

| | ரூ. சத. |
|---|---|
| புதுத்தியானங்கள் (அனுதின தியானக்குறிப்புகள்) | ...15-00 |
| சத்தியவேத சித்திரவிளக்கம் | ... 5-50 |
| புதியஏற்பாடு (பெரிது) | ... 8-50 |
| ,, (சிறிது) | ... 3-75 |
| ஞானோபதேசக் கோர்வை (மூன்று பாகங்களும்) | ... 9-75 |
| சத்திய வேதாகம சங்ஷேபம் பழையஏற்பாடு & புதியஏற்பாடு | 1-00 |
| அர்ச். லூக்காஸ் சுவிசேஷம் | ... 1-00 |
| திருப்பாடுகளின்மேல் தியானம் | ... 1-25 |
| கிறீஸ்துநாதர் அனுசாரம் | ... 3-25 |
| வாழ்க்கையில் வழிகாட்டி | ... 2-75 |
| கன்னியர் ஒழுக்கம் | ... 1-00 |
| திருப்பாடுகளின் மேல் புதுத் தியானங்கள் | ... 1-25 |
| தாவீது இராசாவின் 150 சங்கீதங்கள் | ... 2-60 |
| யேசுநாதர் | 2-75 / 3-90 |
| அன்பின் அழைப்பு | ... 2-75 |
| அன்பின் அனல் | ... 45 |
| அன்பின் அரசர் | ... 2-00 |
| கத்தோலிக்கு களஞ்சியம் | அச்சில் |
| மன்ரேசா | ... 3-00 |
| அர்ச்சியசிஷ்டவாரம் | ... 1-00 |
| ஞானசீவியம் | ... 3-00 |
| கிறீஸ்துநாதர் எங்கள் கர்த்தா | ... 1-00 |
| பிரதான மந்திரங்களின் வியாக்கியானம் | ... 2-25 |
| என்பலி (சங்கீதத்துடன்) | ... 1-25 |
| என்பலி (சங்கீதம் இல்லாமல்) | ... 40 |
| மரியாயின் மைந்தர் மோக்ஷம் | 2-50 / 2-00 / 1-50 |
| மரியாயின் வல்லபம் | ... 2-00 |
| கற்பு என் பொக்ஷம் | ... 50 |
| தேவமாதாவின் அமலோற்பவ மகிமை | ... 50 |
| குருக்களுக்காக ஜெபிப்பதேன்? | ... 25 |
| புதுநன்மை பட்டத்திட்டம் | ... 90 |
| திருக்குடும்ப பக்திமாலை | ... 3-00 |
| பத்தாம் பத்திநாதர் | ... 2-60 |
| திருஇருதய வணக்கமாதம் | ... 2-00 |
| சூசையப்பர் வணக்கமாதம் | ... 2-00 |
| திருஇருதய நவநாள் | ... 25 |
| உத்தரிக்கிற ஆத்துமங்களுக்கு உதவி நவநாள் | ... 35 |
| உத்தரிக்கிற ஆத்துமாக்களின் வணக்கமாதம் | ... 1-65 |
| செந்தூல் (அர்ச். மரியகொறெற்றியின் வாழ்க்கைச்சித்திரம்) | ... 1-60 |
| சனிக்கிழமைப் புதுமை | ... 2-00 |
| ஞாயிற்றுக்கிழமைப் புதுமை | ... 1-30 |
| திங்கட்கிழமைப் புதுமை | ... 1-30 |
| தாழ்ச்சிக் கண்ணுடி | ... 50 |
| துறவற சல்லாபம் | ... 1-00 |

* * *

### கத்தோலிக்க சரிதைகளும், நாவல்களும்

| | |
|---|---|
| வேதசாட்சி | ... 1-00 |
| பலித்த கனவு | ... 1-00 |
| தமிழ்த்தூது | ... 3-60 |
| அர்ச். சூசையப்பரின் மகத்துவம் | ... 1-30 |
| அர்ச். சவேரியார் | ... 1-00 |
| தேவப்பிரசைகள் திருச்சரிதை | ... 1-60 |
| அர்ச். சரித்திரம் 4 பாகமும் | ... 12-00 |
| யேசு திருச்சரிதை | ... 1-00 |
| யேசுவின்சிறிய புஷ்பம் | ... 1-10 |
| அர்ச். அந்தோனியார் சத்துரு சங்காரமாலை | ... 1-00 |
| அர்ச். சூசையப்பர் | ... 55 |
| அர்ச். அருளானந்தர் | ... 2-00 |
| அர்ச். ஞானப்பிரகாசியார் சரித்திரம் | ... 1-10 |
| அர்ச். வின்செண்ட் தெ பவுல் | ... 1-10 |
| பிரதாப முதலியார் சரித்திரம் | ... 3-90 |
| பிரதாப முதலியார் சரித்திரம் சிறுவர், பதிப்பு | ... 2-00 |
| அர்ச். சவேரியார் சரித்திரம் | ... 3-25 |
| பங்கிராஸ் | ... 3-50 |
| இரத்தம்வடிந்த லீலி | ... 75 |
| இன்பத்திலும் துன்பத்திலும் | ... 2-00 |
| திக்கற்ற தையல் | ... 2-00 |
| மலரோ மணமோ | ... 2-60 |
| லீலிமலர் (அல்லது)கற்பெனும் பரிசுத்த புண்ணியம் | ... 1-55 |

- தபாற்செலவு பிரத்தியேகம்.
- புஸ்தகப் பெறுமதியின் அரை வாசிப்பணம்அனுப்பாத வி.பி.பி. கவனிக்கப்படமாட்டாது.

## எமது கத்தோலிக்க பிரசுரங்கள்

| | ரூ. ச. |
|---|---|
| சின்னக் குறிப்பிடம் | ... 30 |
| பெரிய குறிப்பிடம் | ... 50 |
| மெய்விவாகக் குறிப்பிடம் | ... 05 |
| உறுதிப்பூசுதற் குறிப்பிடம் | அச்சில் |
| சத்தியவேத தர்ப்பணம் போதககாண்டம் (Part I) | ... 2-50 |
| எனது பூசைப் புத்தகம் திவ்வியபூசைஆராதனையை முழுதாய் அடக்கியது. | |
| கிளேஸ் பேப்பர் | ... 5-00 |
| பைபிள் ,, | ... 5-75 |
| ,, அடையாளமுள்ளது | ... 6-00 |
| மோக்ஷபாதை (கலிக்கோ) | ... 5-00 |
| ,, (தோல்) | ... 7-50 |
| முத்தித்திறவுகோல் (கலிக்கோ) | ... 2-50 |
| ,, (தோல்) | ... 3-50 |
| செபச்செண்டு | ... 75 |
| பிரசித்த ஆராதனையின் சாதாரண செபங்கள் | ... 2-00 |
| திவ்விய பூசையின் சாதாரண செபங்கள் | ... 40 |
| நித்திய ஆராதனை | ... 25 |
| இரா ஆராதனை | ... 25 |
| திருமணித்தியாலம் | ... 40 |
| திவ்வியபூசை மகத்துவம் | ... 2-50 |
| பூசை உதவி மந்திரம் | ... 40 |
| பூசை உதவி மந்திரம் (மட்டை) | ... 15 |
| வேதாகம வாசிப்பு | ... 90 |
| சற்பிரசாத அன்பன் | ... 20 |
| யேசுநாதரின் சுவிசேஷம் அல்லது நான்கு சுவிசேஷங்களின் ஒப்புமை | ... 2-90 |
| பசாம் ... | ... 1-50 |
| சிலுவைப் பாதை | ... 25 |
| மகா மனந்திரும்புதல் இயக்கப் பிரசங்கங்கள் | ... 1-00 |
| சுவிசேஷ விரித்துரை (பசாமுடன்) | ... 6-50 |
| (பசாமில்லாமல்) | ... 5-00 |
| கத்தோலிக்கு கீர்த்தனைமாலை லத்தீன் 1-ம் பகுதி (நோட்டில்லாமல்) | ... 75 |
| தமிழ் 2-ம் பகுதி (நோட்டில்லாமல்) | ... 75 |
| இரண்டும்சேர்த்துக் கட்டியது (நோட்டில்லாமல்) | ... 1-50 |
| லத்தீன் (1-ம் பகுதி நோட்டுகளுடன்) | ... 2-25 |
| தமிழ் (2-ம் பகுதி நோட்டுகளுடன்) | ... 2-25 |
| தமிழ் லத்தீன் இரண்டும் (நோட்டுகளுடன்) | ... 4-75 |
| கிறீஸ்துநாதர் சரித்திர ஆராய்ச்சி | ... 75 |
| ஆண்டவர் சரித்திரம் (Part I) | ... 90 |
| ,, (Part II) | ... 90 |
| ,, (Part III) | 90 |
| திருஇருதய வணக்கமாதம் | ... 1-50 |
| தேவமாதாவின் வணக்கமாதம் | ... 1-50 |
| மரியாயின் மாசில்லாத இருதயப் பொக்ஷம் | ... 1-50 |
| அவர்கள் மூன்று சிறுவர்கள் (பாத்திமா) | ... 2-50 |
| கிறீஸ்துநாதரும் அவருடைய போதனைகளும் | ... 1-50 |
| நவதின உற்சவம் | ... 75 |
| தரும அப்பம் | ... 1-00 |
| பத்திச் சபைகள் | ... 20 |
| ஆத்தும தரிசனம் | ... 20 |
| தமிழரின் பூர்வசரித்திரம் | ... 50 |
| ஹெலேனு அல்லது திருக்காய அடையாளம்பெற்ற இலங்கைக் கன்னிகை சரித்திரம் | ... 35 |
| அர்ச். லூயிமேரி கிறிஞ்ஞோன் சீவிய சரித்திரம் | ... 40 |
| இலங்கும் மகிமைமுடி | ... 30 |
| ஆத்துமாக்களின் அழுகைக்குரல் | .. 1-50 |
| ஞானவொடுக்கப் பிரசங்கம் | ... 1-50 |
| புதியஏற்பாட்டின் திருப்பலி | ... 25 |
| Oremus Book | .. 1·25 |

மனேஜர்,
அர்ச். சூசைமாமுனிவர் அச்சகம்,
யாழ்ப்பாணம்.

---

மட்டக்களப்பு

## தாண்டவன்வெளித் தபால்

**தலைமைஆசிரியை தினவிழா:** தாண்டவன்வெளிப் பெண்கள் கழகத்தின் தலைமைஆசிரியை திருமதி ஈ. ஏ. நாதன் அவர்களது பெயர்கொண்டதின விழா சென்ற 21-11-55 திங்கள்வாரம் பங்குக்குரவர் வண. ஜி. ஈ. எல். வம்பேக்சுவாமிகள் தலைமையில் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. சுவாமியவர்களுக்கு மாலைசூட்டித் தலைமைஆசிரியைக்குப் பூச்செண்டளிக்கப் பட்டதும் மாணவிகளால் வரவேற்புப்பாக்கள் படித்து அன்பளிப்பும் வழங்கப்பட்டது. பின்னர் காலட்சேபமும், தேநீர்விருந்தும் நடைபெற்றன. அவ்வேளை சுவாமியவர்கள் தலைமைஆசிரியையின் 22 வருடகால சேவையையும், உதவி ஆசிரியைகளின் ஒத்துழைப்பையும் பாராட்டினர். தலைமைஆசிரியையின் நன்றியுரையின்பின் வாழ்த்துப் பாடப்பெற்று விழா இனிதே முடிவெய்தியது.

**அரசினர் ஆசிரியகலாசாலையும், இரண்டாம் வருடக் கத்தோலிக்க ஆசிரிய மாணவர், மாணவிகளும்:** மட்டக்களப்பு, அரசினர் ஆசிரிய கலாசாலையிலுள்ள 2-ம்வருட கத்தோலிக்க ஆசிரியமாணவர், மாணவிகள் தங்கள் இறுதிப் பரீட்சை முடிவடைந்ததை முன்னிட்டுச் சென்ற 26-11-55 சனிக்கிழமை பி. ப. 5 மணியளவில் தேநீர் விழாவொன்று இனிதே நடாத்தினர். மகாவந். திரிகோணமலை மேற்றிராணியாண்டவரையும், கட்டளைக் குரவர் வண. ஜோர்ஜ் ஈ. எல். வம்பேக் சுவாமியவர்களையும் ஆசிரியகலாசாலை அதிபர் திரு. பி. சவிரிமுத்து, எம். ஏ. அவர்களும், மாணவர், மாணவிகளும் வரவேற்று அழைத்துச்சென்றதும் அனைவரும் புகைப்படம் பிடிக்கப்பெற்றுத் தேநீர் விருந்து உபசாரத்தில் கலந்துகொண்டனர். இரண்டுவருடங்களாகத் தங்கள் கலாசாலையில் சமயபோதக ஆசிரியராகக் கடமையாற்றியதை முன்னிட்டு வண. வம்பேக் சுவாமியவர்களுக்கு உபகாரப்பொருள் வழங்கப்பட்டது. ஈற்றில் மேற்றிராணியாண்டவரும், சுவாமியவர்களும் பேசியபோது: ஆசிரியர்கள் தங்கள்சேவை பேச்சில்மாத்திரமல்ல, செயலிலும் இருக்கப் பார்த்துக் கொள்ள வேண்டுமெனக் கூறினார்கள். பின்னர் அதிபர் அவர்களாலும், ஆசிரிய மாணவியாலும் நன்றிகூறப்பட்டு விழா முற்றுப்பெற்றது.

— நிருபர்

## மாதா நூற்ற நூல்

(7-ம் பக்கத் தொடர்ச்சி)

கைதட்டி, "அம்மா உங்களுக்குநூறு நூற்பந்துகளுக்கு அதிகமாகவே நூல் கிடைக்கும்" என்று ஆர்ப்பரித்தனர்.

அப்பெண் விளக்கு வெளிச்சத்தில் இரவெல்லாம் நூற்றுக்கொண் டிருந்தாள். என்ன செய்வாள் பாவம்! நடுச்சாமத்திற்குப்பிறகு தூக்கம் வந்துவிட்டது. ஆசனத்தில் உட்கார்ந்தபடியே சுவர்மீது சாய்ந்துவிட்டாள். ஆனால், அவள் கையிலிருந்த தாரோவெனில் புதுமையாக நூல் நூற்றவண்ணமேயிருந்தது. "தேவமாதா நூல் நூற்கிறு! ஆ, என்ன அழகான நூல்!" என்று மிஷேலும், நிக்கோலும் கனவில்கத்தினர். அயர்ந்து நித்திரை செய்த அப்பெண்ணும், அவள்புருஷனும் அதைக் கேட்கவில்லை.

கிராமக்கோவிலில் திரிகாலமணி அடிக்கும்பொழுது அப்பெண் விழித்துக்கொண்டாள். அவளுக்குமுன்னுல் வெண்பட்டைத் தோற்கடிக்கக்கூடிய அழகுவாய்ந்த நூற்பந்துகள் கிடந்தன. அவள் கண்களிலிருந்து ஆனந்த பாஷ்பம் சொரிந்தது. முழந்தாளிட்டுத் தேவமாதாவுக்கு நன்றியறிந்த தோத்திரம் செலுத்தினுள்.

மறுநாட்காலை கிராமத்துப்பெண்கள் தூயஆடைகள்அணிந்து நூற்சுருணைகளை எடுத்துக்கொண்டு குன்றின்மீது ஏறிச்சென்றூர்கள். சிறுமிகள் புஷ்பச் செண்டுகளைக் கையிலேந்தியவர்களாய்த் தங்கள்தாய்மாருடன் சென்றூர்கள். மாளிகையில் யொலாந்தா புன்னகைபூத்த வதனத்துடன் அவர்களைவரவேற்றுள். நிக்கோல் புஷ்பச்செண்டைக் கொடுத்தபிறகு அவள் தாய் தனது நூற்பந்துகளை மேசையின் மேல்வைத்தபோது அவற்றின் தூய வெண்மை நிறத்தையும், பளபளப்பையுங்கண்டு யொலாந்தா பெரிதும்சந்தோஷப்பட்டு அவள்கையைப் பட்சத்துடன் குலுக்கி, நிக்கோலை அருகில்வரவழைத்து அவளை இருகன்னங்களிலும் முத்தமிட்டாள்.

---

### நன்றியறிந்த ஸ்தோத்திரம்

யேசுவின் திருஇருதய இரக்கத்தினுலும், நற்சகாயமாதா, கோடிவரத்தரான அர்ச். அந்தோனியார், அர்ச். றீத்தம்மா, அர்ச். பிலோமினம்மா இவர்களின் அநுக்கிரகத்தினுலும் நான்கேட்டகாரியம் அநுகூலமாயிற்று. நன்றியறிந்த ஸ்தோத்திரமாக இதைப் பிரசுரிக்கின்றேன். இத்திருநாமங்கள் என்றென்றும் புகழப்படுவதாக!

மாதகல் ஆர். அக்கினேஸ் புஸ்பம்

---

❊ சாதாரண ஆங்கிலகல்வி அறிவுடையஒருவன் எத்தனை சொற்கள் வரையில் உபயோகிக்கின்றுன்?

ஆங்கிலமொழியில் ஏறக்குறைய மூன்று லட்சம் சொற்கள்உள்ளன. சாதாரண ஆங்கிலங்கற்ற ஒருவன் மூவாயிரமுதல் நாலாயிரம்சொற்கள் வரையில் உபயோகப்படுத்துகின்றுன்.

---

Printed and Published for the Proprietor by NICHOLAS JAMES, residing at No. 20, Fifth Cross Street, Jaffna, at St. Joseph's Catholic Press, Catholic Mission Premises, Main Street, Jaffna, on Thursday, December 1·1955.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சத்தியவேத பாதுகாவலன் அனுபந்தம் 1—12—1955

# புனிதவீரன்

## அண்ணா சொல்வது :

அருமைச்சகோதரங்களே !

1793 இல் பிரான்சில் நடந்த உள்நாட்டுக் கலகத்தின்போது, கலகக்காரரில் ஒருவன் "நாங்கள் உங்கள் கோயில்கள் கோபுரங்களைத் தகர்த்தெறியப் போகிறோம்" என்று ஒருகமக்காரனுக்குச் சொன்னான்.

"அப்படிச் செய்தாலுஞ் செய்யலாம். ஆனால், நீலவானத்தையும் நட்சத்திரங்களையும் இடித்துவிட மாட்டீர்கள் ; நட்சத்திரமென்னும் புத்தகம் இருக்குமளவும் எங்கள் பிள்ளைகளுக்குக் கடவுளைப் பற்றிப் படிப்பிக்கலாம்" என்றான் கமக்காரன்.

விசுவாசத்துடன் பார்த்தால் சருவேசுரனிருக்கிறாரென்று உலகத்திலுள்ள பொருட்கள், சிருட்டிகள் சொல்லும். விசுவாசமிருந்தால் உலகம், சீவியம், வேதம் என்பவைகளைப் பற்றி நீங்கள் கொண்டிருக்கும் மனப்பான்மை வித்தியாசமாயிருக்கும்.

சற்பிரசாதத்தை நினைவு கூருங்கள். யேசு நற்கருணையில் இருக்கிறாரென்று விசுவசிக்கிறீர்களா? அந்த விசுவாசத்தின்படி நடவுங்கள். சற்பிரசாதத்தில் யேசுநாதர் வீற்றிருக்கிறாரென்றும், நாமவரை உட்கொள்ளலாமென்றும் விசுவசித்தால் கோயிலில் எமது செபம் காந்தக்கட்டிகளாயிருக்குமல்லவா?

நற்கருணைக்கு ஆயத்தமும் நன்றித் தோத்திரமும் இடையீடில்லாத ஆராதனை அன்பு, நன்றியாயிராதா? அர்ச். தொம்மை அப்போஸ்தலர் கூறிய "என் ஆண்டவரே, என்தேவனே!" என்னும் வாக்கு இதைக் குறிக்கவில்லையா?

உங்கள் அன்புள்ள,

அண்ணா.

*　　*　　*

**பணத்தைக் கொண்டு :**

பராக்கையும், பொழுதுபோக்கையும் வாங்கலாம்,
சந்தோஷத்தை வாங்கமுடியாது.
வேலைகாரரை வாங்கலாம்,
பிரமாணிக்கத்தை வாங்கமுடியாது.
பல பண்டங்களை வாங்கலாம்,
கிறீஸ்துவை வாங்கமுடியாது.

---

## கேள்விக்குப் பதில் :

(1) கால்மெட்டியும், கரீன் என்பவரும். (2) R. R. வில்லியம்ஸ். (3) ஆமைக்குப் பற்கள் இல்லை. (4) ஆம், மரங்களும் மனிதனைப் போன்று பிராணவாயுவைச்சுவாசித்துக் கரிய மலை வாயுவை மரங்களில் பல்வேறு பகுதிகளிலுள்ள சிறு துவாரங்களின்மூலம் வெளிவிடுகின்றன. (5) சந்திரனின் குறுக்களவு 2,100 மைல். (6) "பேர்ட்" என்பவர் கண்டுபிடித்தார். (7) கஸ்பியன், விஸ்தீரணம் 1,69,330 சதுர மைல்கள். (8) சுவிசேஷகர்கள் அர்ச். மார்க், அர்ச். லூக்காஸ், அர்ச். மத்தேயு, அர்ச். அருளப்பர். (9) இப்படிப் போட்டுக் கூட்டிப்பாருங்கள்,

```
 666
  66
   6
----
 738
```

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கன்ம பாவம்

கப்பலோட்டியின் கடிதம்: ஒருமீசாமில் உள்ள குருவானவருக்கு ஒருகடிதம் கிடைத்தது. அவருடைய மீசாமில் இருந்த ஓர் பையனால் அனுப்பப்பட்டது. அக்கடிதத்தின் சாரம் பின்வருமாறு:

அன்பான பிதாவே,

நேற்று நான் பிரயாணம் செய்தகப்பல் நீரில் மூழ்கிவிட்டது. எனது நண்பனின் உயிரற்றஉடல் என்கண்முன்னே காணப்பட்டது. உடனே நாங்கள் எல்லோரும் தூசிகள் என்று நீங்கள் கூறியது என்மனதுள் தோன்றியது. நாங்கள் எதிலிருந்து உற்பத்தியானேமோ, இனி எப்படிப்போவோமோ அவைஎல்லாம் தூசிதான். நாங்கள் தூசிகள் என்னும்போது தூசிகளில் பலவிதம் உண்டென்பதை உணர்ந்தீர்களா சுவாமி?

பூமியில் உள்ள தூசி கறுப்பு, அதில் புரண்டு உருண்டு விளையாடவும், அதை உடைகளில் அப்பிக்கொள்ளவும் ஒருவரும்விரும்பமாட்டார்கள். வேறுஒன்று அதுதான் காவிநிறத்தூசி. நான் சிறு பையனாய் இருந்தபொழுது அம்மாவுக்கு உதவியாய் வீட்டைப் பெருக்குவேன். பெருக்கும்போது கிளம்பும்தூசி காவி நிறமாயிருக்கும். அதுமேலே போகப் போகப் பொன் நிறமாய்த் தோன்றும். இத் தூசிகள் என் ஆத்துமத்தில் நிழலிடுகின்றன. கருமையானதூசி சாவான பாவமுடைய ஆத்துமத்தையும், காவி நிறத்தூசி அற்பபாவ ஆத்துமத்தையும் குறிக்கிறது. வரப்பிரசாதம் நிறைந்த ஆத்துமத்தில் காணப்படுவது பொன்நிறத் தூசி.

குருவே! நாங்கள் இப்போ தூசியைத் தவிர வேறொன்றுமில்லை. ஆனல், எங்களுடைய தூசி பொன்நிறமாய்க் காட்சியளிக்க நாம் பிரயாசப்பட வேண்டும். இதுவே என் ஆசை.

இப்படிக்கு,
தங்கள் கீழ்ப்படிவுள்ள பிள்ளை,
யோண்.

## அற்ப பாவமென்றால் என்ன?

அற்பபாவம் மிகவும் அபாயகரமானது சாவான பாவத்திற்கு அடுத்தது இதுதான். இதன்காரணம் யாது? பிரதானமான நியாயம் என்னவெனில், அற்பபாவம் சருவேசுரனை வெறுக்கச் செய்கிறது. சருவேசுரன் பரிசுத்தமும், இரக்கமும், நீதியுமுள்ளவர். ஒருசின்னப் பாவமானாலும் சருவேசுரன் அதை வெறுக்கிறார். சாவானபாவம் சருவேசுரனைக் கடுமையாக வாதிக்கிறது. நாங்கள் தெண்டித்தால் சாவான பாவத்தைக் கட்டிக்கொள்ளாமல் இருக்கலாம். அற்பபாவம் சருவேசுரனை வெறுக்கச் செய்கிறது. அற்பபாவம் என்னஎன்பதை ஆராய்வோம். குறைந்த அறிவு அவதானத்துடன் முழுச் சம்மதமின்றிக் கனங்கொண்ட காரியத்தில் அல்லது அறிவு அவதான சம்மதத்துடன் அற்பகாரியத்தில் தேவகட்டளையை மீறுதலே அற்பபாவமாம். இதற்குச்சில உதாரணங்கள்: சிறுவிஷயத்தில் பொய் பேசுவது, பெறுமதியற்ற பொருளைக் களவெடுப்பது. ஞாயிறு பூசைக்குப் பிந்திவருவது, ஆசிரியர்களுக்கு அமைச்சலீனம் காட்டுவது, தோழருடன் சண்டையிடுவது, செபநேரம் பராக்குப்பார்ப்பது, கோயிலில் கதைப்பது, கவனயீனமாய்த்தேவனின் பெயரைப்பாவிப்பது இவைகள்யாவும் அற்ப பாவத்துக்கு உதாரணங்கள் இவ்வற்ப பாவங்கள் கனமற்றவைகளாய்இருந்தாலும் இவைகளை வெறுக்கவேண்டும். நாம் ஓர் அற்ப

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாவத்தை முதலாய்க் கட்டிக்கொள்ளாதுஇருந்தால், இவ்வுலகத்தை அழிவிலிருந்து காப்பாற்றலாம்.

இன்னுமோர் உதாரணம்: மேரி தனது ஆறுவயதில் சோம்பலின் நிமித்தம் ஞாயிறு பூசையைத் தப்பவிட்டாள். அந்தநேரம் அது சாவான பாவமென அவள் அறியவில்லை. ஆனால், அப்படிச் செய்தது அவளுக்குப் பிழைபோல் தோன்றிற்று. இரு வருடங்களுக்குப் பின்னால் ஞாயிறு பூசைகாணாது போனால் சாவானபாவம் என அறிந்தாள். இருவருடங்களுக்கு முன்னே பூசைக்குப் போகாதுவிட்டது சாவான பாவமா? இல்லை. ஆனால், அற்பபாவத்தைக் கட்டிக்கொண்டாளே தவிரச் சாவான பாவத்தைக் கட்டிக்கொள்ளவில்லை. (தொடரும்)

---

## உங்களுக்குத் தெரியுமா?

1. கடைசியாக அகிலஉலக ஒலிம்பிக் விளையாட்டுப்போட்டி எங்கே நடைபெற்றது?
2. "ஸ்ரேடியம்" என்று ஆங்கிலத்தில் கூறப்படுவது என்ன?
3. பூமியின் நாராசம் எத்தனைபாகை சரிந்திருக்கிறது?
4. பூமியின் விட்டம் என்ன?
5. மனிதனுக்குச் செலவில்லாமல் ஆரோக்கியத்தைத் தரக்கூடியது என்ன?
6. ஒரு மனிதனுடைய சரீரத்திலுள்ள இரத்தத்தின் எடை எவ்வளவு?
7. ஒருசொட்டு இரத்தத்தில் வெண்ணணு எவ்வளவு, செவ்வணு எவ்வளவு?
8. இலங்கையில் எந்த ஆங்கிலேய தேசாதிபதி காலத்தில் றோட்டுகள் அமைக்கப்பட்டன?
9. கத்தோலிக்க சமயம் எப்போது இலங்கைக்கு வந்தது?
10. சந்திரனுக்குச் சுயஒளி உண்டா?

## விளங்கவில்லையா?



அடிவாரத்தில் கண்களைப் பொருத்தி ஒருகண்ணை மூடியவண்ணம் முன்புறமாகச் சற்றுத்தூக்கிப்பிடித்துப் பாருங்கள்.

---

❋ ஏழையின் பொக்ஷம் பொறுமை; ஆனால், தனவந்தன் பொன் கொடுத்தும் அதைஅடைதல் அரிது.

---

உங்கள் விஷயதானங்களை மேல்வரும் முகவரிக்கு அனுப்புங்கள்:

**"அண்ணா", சஞ்சூசையப்பர் தாபனம், கொழும்புத்துறை, யாழ்ப்பாணம்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொன்னின் பெருமையே பெருமை

: யோபு :

(சென்றவாரத் தொடர்ச்சி)

பெண்களிருவரும் தம்முள் பேசிய கதைகள்யாவையும் தலைமறைவாகக் கேட்டுக்கேட்டு உள்ளம்பூரித்தேன். ஒரு குருவானவரின் பரிசாகப்போகிறேன் என்பதை அப்போதுதான் அறியநேர்ந்தது. குருவானவரின் அபிஷேகம் செய்யப்பட்ட கரங்கள், என்னைத்தாங்கவும், நமதுதிவ்விய கர்த்தருடைய திருச்சரீரமே என்னில் தங்கவும் முடியுமென்று அக்களிப்புற்றேன். அன்று முதல் நான் பலருடைய கவனத்தையும் கவர்ந்து கொண்டேன். என்னை மறைத்திருந்த கடதாசியை எடுத்து ஒருபுறம் வைத்துத் தனதுகரங்களால் மெதுவாக என்னைத் திறந்தபொழுது அவர்கள் உண்மையாய் நடுங்கியதை உணர்ந்தேன். கடவுளுக்குத் தான் செய்யவிருக்கும் தொண்டுகளையும் சேவைகளையும் எண்ணியபொழுது குருவானவர் நடுக்கமுற்றார்போலும்.

அன்றொருநாட் காலை, சிலவெள்ளை ஒஸ்திஅப்பங்களை எனது அறையுள் அடக்கிக்கொண்டு, ஒரு தோற்பையையும் எடுத்துக்கொண்டு புறப்பட்டார்குருவானவர். ஒரு சாலைவழியாகச் சென்று ஒரு வீட்டிற்குமுன்னால் வந்துநின்றார். வீட்டின் கதவைச் சிறுகதட்டினார். கதவு திறபட்டுவிட்டது. உள்ளே இருந்த அறைஒன்றில் பலநாட் படுக்கையாய் இருக்கும் வயதுசென்ற ஒரு கிழவி இருந்தாள். கைகள் குவிந்தமேரையாயும், கண்கள் மேல்நோக்கிய தன்மையாயும் அவள்கிடந்தாள். அவளது சொண்டுகள் செபத்தில் அசைந்தன. குருவானவர் நற்கருணையைக் கையிலேந்தி “உலகத்தின் பாவங்களைப் போக்குகிற தேவசெம்மறிப் புருவை இதுவே” என்ற சொற்களை உச்சரிக்கும்பொழுது எனது மகிழ்ச்சிக்கு அளவே இல்லை. ஆத்துமாக்களை ஈடேற்றும் அலுவலில் குருவானவருடன் நானும் பங்குபெறுகிறேன் என்பதை நினைந்து பரவசமானேன்.

ஆம், நான் ஆண்டவருடைய இருப்பிடம். அவர்தங்கும் இடம். உலகம்முழுவதையும் படைத்த சிருஷ்டிகர் வாசஸ்தலம் உண்மையில் மனிதருக்குக்கூடக் கிடைத்திராத பெருமை எனக்குக் கிடைத்துவிட்டது. தன்னைப்பெற்றுக் கொள்ளும்படி அவர் ஆத்துமாக்களை விரும்பி அழைத்தபோது அநேகர் அசட்டைபண்ணுகிறார்கள். இந்தநன்றி கெட்ட யனிதரிலும் நான் உண்மையில் பெருமையுடையவனன்றோ! உலக முடிவுபரியந்தம் ஆண்டவரை ஏந்தியிருக்கப் பேறுபெற்றதே பாக்கியம்

---

## சிந்தியுங்கள்

(1) பொறுமை என்னும் புண்ணியம் மறுமைக்கு ஓர் ஊன்றுகோல்.

(2) நாம் வேஷத்தைக் கண்டு ஏமாறாதபோது கபடமற்ற எச்செயலுக்கும் நேர்மைஎன்னும் அழியாத முத்திரையைப் பொறித்துவிடுகிறோம்.

(3) தீயசெயல்களை நல்லசெயல்களினாலே மறைத்துவிட்ட ஒருவர், மேகத்திலிருந்து வெளிப்பட்ட வெண்ணிலாவைப்போல் விளங்குவார்

(4) அன்பென்னும் கயிறுதான் அகிலஉலகத்தையும் பிணைக்கவல்லது. அன்பாகிய திறவுகோலால் எவ்வளவு கடினமான இருதயங்களையும் திறக்கலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org